# தாயகம்



BAY OF TEAR

Tamilische Zeitschrift des Südasienbüros 41



வித்தியார்த்தியின் அறையில் "ஒரு வீடு, இரு வாசல்" படம் போட்டுப் பார்த்தார்கள். பாலசந்தரின் படம் என்பதால் வித்தியார்த்தியும் சின்ன எதிர்பார்ப்போடு பார்த்தான். ஓடிப் பிடிக்கும் காதற்காட்சிகள், சண்டைக் காட்சிகள், கற்பழிப்புக்காட்சிகள்.... என்ற சினிமா வாய்ப்பாடுகள் இல்லாமல் படம் அமைந்திருந்தது.

முதல் வாசலில்... நன்றாக படித்த, வசதியுள்ள பெண் எப்படிக் குடும்பம் என்ற அமைப்புக்குள் கணவனின் ஆதிக்கத்தை எதிர்த்து தனது சுயத்தை நிலைநிறுத்திக்கொள்கிறாள் என்பதை பாலசந்தர் நன்றாகவே காட்டியிருக்கிறார் என்பதில் வித்தியார்த்திக்கு கருத்து முரண்பாடு இல்லை. குறிப்பாக உடலுறவு மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு தேடும் ஆண் கும்பல்களின் சாகசங்கள் பற்றி விழிப்பாயிருக் வேண்டியதையும், தனக்கு இஷ்டமில்லாதது மனைவிக்கும் இஷ்டப்படாததாயேயிருக்கவேண்டும் என்ற கணவன்களின் சர்வாதிகாரத்தை மனைவிகள் தைரியம் மிகுந்து மீறவேண்டியதையும் ஓரளவு தெளிவாகக் காட்டியிருப்பதாகவே வித்தியார்த்தி கருதினாலும், எல்லாவற்றிலும் எச்சரிக்கையாயிருப்பதாகக் காட்டப்படும் கதாநாயகி திருமணம் செய்வதற்கு முன்பதாக இல்லாமல் முதலிரவின்போதே கணவனிடம் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்வோம் என்று பேசுவது எந்த வகைக்குள் அடங்கும் என்றே வித்தியார்த்தி யோசிக்கின்றான்.

பாலசந்தரால் பெண்ணிலைவாதியாகக் காட்டப்படும் கதாநாயகியின் வாயிலிருந்து எந்தவிதமான சரளமான– சாதாரணமான உரையாடல்களும் வராததோடு, கணவன் தவிர்ந்தோரிடமும் வெட்டொன்று, துண்டிரண்டாக நடந்து கொள்வது பெண்ணிலைவாதிகள் அசாதாரணமானவர்கள், முரட்டுத்தன்மைவாய்ந்தவர்கள், தங்களை வித்தியாசமாகக் காட்ட முனைபவர்கள் என்ற பெண்கள் மீதான கருத்தியல் ஒடுக்குமுறையையே பாலசந்தரும் கைக்கொண்டுள்ளார் என்பதையே தெரிவிப்பதாக வித்தியார்த்தியால் கருதமுடிந்தது.

அத்துடன் கணவனின் பாலியல் வன்முறைக்குப் பலியாக்கப்பட்ட ஏழைப் பெண்ணுக்கு காசைக் கொடுத்து விசயத்தைச் சரிக்கட்ட முனைவதானது ஒன்றில், மத்தியதரத்துவர்க்கப்பெண்களால் இப்படித்தான் விடுதலையைப் பார்க்கமுடியும் அல்லது

# வித்தியார்த்தியின் டயரி

ஏழைப்பெண்கள் என்றால் காசு மட்டும் போதும், வசதியுள்ள பெண்களின் பிரச்சினையே உண்மையான—அனைவராலும் கவனிக்கப்படவேண்டிய, தீர்த்து வைக்கப்படவேண்டிய பிரச்சினையென காட்டுவதாக அமைந்தாலும் , பின்னையதே பாலசந்தரின் பெண்விடுதலை பற்றிய கண்ணோட்டத்தைக் காட்டுகிறது என்றே வித்தியார்த்தியால் சொல்ல முடியும். இந்த விடயத்தில் பெண்நிலைவாதியாக சித்தரிக்கப்படும் கதாநாயகி ஏழைப் பெண்—ணுக்குப் பணம் கொடுக்க முற்படுவதால் அப்பெண்ணை விபச்—சாரியாக்கியும், கணவனின் பாலியல் வன்முறையைச் சிறிய தவறாக்கியும் விடுவதுடன் கணவனை எப்படியாவது காப்பாற்றிக்கொள்ள முனையும் நளாயினி காலத்துப் பெண்ணாயிருப்பது இருக்கின்ற சமூக அமைப்பை சிலபூச்சுவேலைகள் செய்து அப்படியே கட்டிக் காப்பதையே புதுமை இயக்குநரும் செய்கிறார் என்பதையே வித்தியார்த்திக்கு உணர்த்தியது.

'ஒருவீடு இருவாசல்' படத்தின் மூலக்கதையை எழுதிய அநுராதா ரமணனின் வேறுகதைகளையும் வித்தியார்த்தி படித்திருக்கிறான். ஓரளவு வசதிபடைத்த குடும்பத்தில் உள்ள கணவன்மார்கள் மனைவியரின் 'ஒத்துழைப்பு' இல்லாததாலோ, குடும்பப் பிரச்சினைகளின் அழுத்தம் காரணமாகவோ 'வைப்பாட்டிகளை' வைத்திருப்பதே சரியான தீர்வென்றும், இப்படி பிரச்சினைகளால் அழுத்தப்பட்டுவரும் ஆண்களுக்கு 'வைப்பாட்டி'களாகவிருந்து அவர்களைச் சந்தோசப்படுத்துவதன் மூலமே — தாங்கள் சந்தோசமாயிருக்க—லாம் என, ஏழைப் பெண்களுக்கு போதனை செய்வதாகவுமே இவரது பெரும்பாலான கதைகள் இருப்பதை வித்தியார்த்தி படித்து அறிந்திருந்தான். தாயே மகளுக்கு 'நல்வழி' சொல்லி வைப்பாட்டியாக்கி விடுவதாகக் கூட கதை எழுதியிருக்கும் அநுராதாரமணனின் கதைகளிலிருந்து 'பெண் விடுதலை'க்கான கதையை பாலசந்தர் தெரிவு செய்துள்ளாரென்றால் இருவரின் கண்ணோட்டத்திற்கும் என்ன வித்தி

யாசம் என்று வித்தியார்த்திக்கு தெரியவில்லை.

படத்தின் இரண்டாவது கதைதான் வித்தியார்த்தியை ஓரளவு பாதிக்கச் செய்தது. சினிமா உலகம் பற்றியும், கலைஞர்கள், தொழிலாளர்கள் வாழ்வு பற்றியும் தங்கள் பார்வைக்கேற்ப எழுதப்பட்ட சுஜாதாவின் கனவுத் தொழிற்சாலை, தூனின் திசை மாறிய நிழல்கள், அசோகமித்திரனின் கரைந்த நிழல்கள், அறந்தை நாராயணனின் மோகத்திரை, ஐக்கா ஆகிய புத்தகங்களிலிருந்து வித்தியார்த்தியால் ஓரளவு அறிந்துகொள்ள முடிந்தது. இவற்றோடு 'ஒருவீடு இரு வாசல்' படமும் சினிமா உலகின் ஒரு பக்கத்தை வித்தியார்த்திக்குக் காட்டியது.

கதாநாயகிக்கு டூப்பாக நடிக்கும் சக நடிகையைப் படிகளால் திரும்பத் திரும்ப உருளச் செய்வது, சண்டைக் காட்சிகளில் சின்னப்பிள்ளை படும் வேதனை, அதைப் பார்க்கும் தாயின் குமுறல்.... சக நடிகர்களின் அவலங்களில் ஒரு பகுதியை காட்டியிருக்கிறதென்றே வித்தியார்த்தி சொல்வான்.

இரண்டாவது வாசலிலும் படித்த பெண்ணினாலேயே வக்கீல் தொழில் பார்த்துத் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளமுடிகிறது. ஆனால் இரண்டு கதையிலும் ஆண்களின் ஆதிக்கத் தன்மைகளும், இதற்குப் பாதுகாப்பளிக்கும் சமூகமும் பாலசந்தரால் காட்டப்பட்டுள்ளதை வித்தியார்த்தி நிராகரிக்கவில்லை.


இருட்டடிக்கப்படும் சக நடிகர்களுக்கு இத் திரைப்படம் சமர்ப்பணம் என்று எழுத்தோடும்போது வித்தியார்த்திக்கு இரண்டு சம்பவங்கள் ஞாபகத்திற்கு வருகின்றன.

ஒன்று, அபூர்வராகங்கள் திரைக்கதை தனக்கு விக்கிரமாதித்தன் கதையிலிருந்தே தோன்றியதாக பாலசந்தர் கூறியதும், அத் திரைக்கதை தன்னுடைய கதையே என்று என். ஆர். தாசன் என்ற எழுத்தாளர் வழக்குப்–போட்டு வென்றதும்,

இரண்டு, 'தாமரை' சஞ்சிகையில் 'வறுமையின் நிறம் சிகப்பு' கதையை எழுதிய ராஜபாளையம் கதைப்பித்தன் என்ற எழுத்தாளருக்கு 1000,–ரூபா கொடுத்துக் கையெழுத்து வாங்கிவிட்டு, ஒரு பத்திரிகையில் – தான் படித்த செய்தியே 'வறுமையின் நிறம் சிகப்பு' என்ற கதையாகி திரைப்படமாகியது என்று பாலசந்தர் பேட்டியளித்ததும்...

ஏழை எழுத்தாளர்களை இருட்டடித்துக்கொண்டே இவர்களைப் போன்றவர்கள் புதுமை இயக்குநர்களாகிப் பணம் சம்பாதிப்பதும், மனித உரிமைகள் பற்றி அரசுகள் கதைப்பதும் ஒன்றென்றே வித்தியார்த்திக்குத் தோன்றுகிறது.

*



வித்தியார்த்திக்குப் படித்துப்பபார்க்க "சரிநிகர்"பத்திரிகையை செல்வத்துரை( நான் தான்! வாசிப்பென்றாலே எனக்கு நித்திரை வந்துவிடும் என்பதால் எந்தச் சஞ்சிகை, பத்திரிகை எனக்குக் கிடைத்தாலும் வித்தியார்த்திக்கு வாசிக்கக்– கொடுத்துவிட்டு விசயங்களை அவனின் வாயிலிருந்தும், டயறியிலிருந்தும்–மற்றவர்களின் டயறி படிப்பதென்றால் ஒரு இன்றெஸ்றதானே!– பிடுங்கிக் கொள்வேன்– இரா. செ.) கொண்டு வந்து கொடுத்திருந்தான்.

கொலைகார, கொள்ளைக்கார அரசியல்வாதிகளை பெரியவர்கள், அன்புள்ளங்கள், அதியுத்தமர்கள்... என்று செல்லம் கொஞ்சியும், அரசுக்குச் சார்பாக இயக்கங்கள் நிற்கும் போது துதிபாடியும், பிறகு பயங்கரவாதிகளாக்கியும் தாங்கள் பெற்றுக்கொள்ளும் சம்பளத்திற்கு மனப்பூர்வமாக ஊழியம் செய்யும் கொழும்புசார் தமிழ்ப் பத்திரிகைகளுக்கு நடுவில் இப்படி ஒரு தமிழ்ப் பத்திரிகையா என்று வித்தியார்த்தி ஆச்சரியப் பட்டான்.

கொழும்புப் பத்திரிகைகளிலிருந்து யாழ்ப்பாணப் பத்திரிகைகள் ஓரளவுக்கு வேறுபட்டாலும் அவை ஒருவகைப் பிரச்சாரங்களாக வெளிவந்தமைக்கு இயக்கங்களின் ஆயுதமொழியும் காரணம் என்பதை வித்தியார்த்தி அறிவான்.

வித்தியார்த்தி முதலில் படித்தது வாசகர் கடிதங்களைத் தான். புலிகள் மக்களின் தெய்வங்கள், வெடிச்சத்தம் கேட்காத நாட்களில் எங்களுக்குப் போரடிக்கிறது, விமானம் குண்டுபோடும்போது ஓடிஒளிப்பது எங்களுக்குப் பொழுதுபோக்கு விளை– யாட்டாகிவிட்டது, புலிகள் பற்றி தப்பாக எழுதிக் கொள்வதை நிறுத்திக்கொள்ளுங்கள், இல்லையேல் எங்கிருந்தாலும் துப்பாக்கிக்குண்டினால் காதுச்சவ்வு வெடிக்கும் என்று இந்துமதி என்பவரும், புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வடக்குக், கிழக்கு வந்த பிறகு மனிதவிரோதச் செயல்கள் நடக்கவில்லை, எதிரிகளைப் பிடித்து விசாரித்தபின் புலிகள் விடுதலை செய்தார்கள், கொல்லவில்லை என்று றஞ்சித் குமார் என்பவரும் யாழ்ப்பாணத்திலிருந்து எழுதியிருந்ததைப் படித்த போது வித்தியார்த்திக்கு மயிர் கூச்செறிந்தது.

வித்தியார்த்திக்கு ஒரே குழப்பமாகப் போய்விட்டது. அரசாங்கமும், அரசாங்கத்துக்கு வாலையாட்டிக்கொண்டிருக்கும் இயக்கங்களும் வடக்கு, கிழக்கில் பொதுமக்கள் சாகவில்லை, தாங்கள் புலிகளின் தலைக்கு மேல் தான் குண்டு போடுகிறோம் என்கின்றன. இக் கடிதங்களை எழுதியிருந்தோர் உண்மையில் புலிகள் அல்லாதோராயிருந்தால்(!) இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக எந்த வன்முறையோ, ஒடுக்குமுறையோ, பிரச்சினையோ இல்லையென்றே ஆகிவிடுகிறிதே! என்று வித்தியார்த்திக்கு யோச

னையாயிருந்தது. எல்லாம் விளை யாட்டாக இருக்கிறதாமே!!!

வெடிச்சத்தமும், ஓடிஒளிப் பதும் பொழுதுபோக்காகிவிட்ட தென்றால் அரசின் தடைகளால் பட்டினி கிடந்து மக்கள் இறக்க வில்லையென்றாலோ, அரசபடை களாலும், இயக்கங்களாலும் மக் கள் அநியாயமாகக் கொல்லப் படவில்லையென்றாலோ எங்க ளுக்கு நித்திரையே வராது என ஒரு பானுமதியும், புலிகளின் கட் டுப்பாட்டின் கீழ் வடக்கு, கிழ க்கு வந்தபின் புலிகளால் மனித விரோதச் செயல்கள் செய்யப் படவில்லையென்றால் இந்தப் பகுதியில் கொல்லப்பட்டவர்களு ம், சித்திரவதை செய்யப்பட்டவ ர்களும் மனிதர்கள் இல்லை, மனி தர்கள் இல்லாமல் நாங்கள் மட்டுந்தான் இப்போது இங்கே யிருக்கிறோம் என்று ஒரு நிர ஞ்சகுமார் உம் இனி வாசகர் கடிதங்கள் எழுதுவார்களோ எ ன்று வித்தியார்த்திக்குப் பயமா கவும் கவலையாகவுமிருந்தது.

தமிழ்மக்களொடு ஒன்றா க வாழ்ந்து வந்த முஸ்லீம் மக் களை 2 மணித்தியலய அவகாச த்தில் குடாநாட்டைவிட்டு வெளி யேற்றியதும், அவர்களது சொந் தப் பொருட்களைப் பறித்தெடு த்து வின்சர் தியேட்டரில் வைத் து விற்றதும், தோடு வரவில்லை என்று சிறுமிகளின் காதுகளையும் அறுத்தெடுத்ததும் வீர மறவர் களின் விடுதலைப் போராட்டம் என்று இந்த யாழ்ப்பாணத்து — வாசகர்கள் கருதுவதாகவே வி த்தியார்த்திக்குத் தோன்றியது.

மட்டக்களப்பு, திருகோண மலையைச் சார்ந்தடெலோ இ யக்கப் போராளிகளை புலிகள் றோட்டு றோட்டாகச் சுட்டுத் தள்ளி, உயிரோடுபோட்டுக்கொ ளுத்தி, பிணங்களை வீதிகளில் இழு த்துக்கொண்டுபோனபோது... கொக்கோகோலாவும், கோழி யும் விருந்துபசாரம் செய்த யாழ்ப்பாணப் பாரம்பரியம் இ ன்னும் எவ்வளவு காலத்துக்கு அ ழிவில் கொடிகட்டிப் பறக்கும் என்பது வித்தியார்த்திக்கு கே ள்வி.

போராளிகள் எதிரிகளிட ம் பிடிபட்டால் சயனைட் அரு ந்திச் சாகவேண்டும். ஆனால் தலைவர்களோ, மேல் மட்டங்க ளோ பிடிபட்டால் யூஸ் குடிக்க லாம் என்பது போன்ற (அ)நி யாயங்களைக்கூடத் தட்டிக்கேட் க முடியாவிட்டாலும், அழித்தலை யும் தெய்வத்தின் தொழிலாகக் கருதி வழிபடும் (இந்து/தமிழ்) பாரம்பரிய நிலையில் இன்னும் பல மறத் தமிழர்கள் இருக்கு ம்வரை நாட்டைவிட்டுத் தப்பி யோடும் 'துரோகிகளும்', இயக் கங்களின் ஆயுதவெறியையும், து ரோகங்களையும் எதிர்த்து சுய ரூபங்களை அம்பலப்படுத்தும் — 'கைக்கூலிகளும்' உருவாவது தவிர் க்க முடியாததுடன் நியாயமான தாகவுமே வித்தியார்த்திக்குப் படுகிறது.

•

தொகுப்பு: நிரா. செல்வத்துரை

# நடுத் தட்டு

அடித்தட்டைப் பார்த்து
அச்சப்படும்.
மேல்தட்டைப் பார்த்து
ஆசைப்படும்.
ஆனால் இடறி விழுந்துவிடாமல்
நின்றுகொண்டு
எட்டிப் பிடிக்க
எத்தனிக்கும்.
தான் மட்டும் துயரப்படுவதாய்
தனியாய் நோக்கும்.
கண்ணீர்க் கடலில்
தன் துளி தேடும்.
போராட்டம் என்றதும்
பெற்றவள், மனைவி, பிள்ளைகளின் முகங்கள்
சோகமாய் தெரிய சோர்ந்து முடங்கும்.
வேலையும், பென்சனும், பஞ்சப்படியும்
நினைவுத் திரையில் நீந்த மயங்கும்.
ஒரு நாளேனும் ஊதியம் இழப்பதாய்
கனவில் காணினும் சிறுநீர் பிரியும்.
ஒருநாள் போராடத் தயங்கி
ஒவ்வொரு நாளும் போராடும்.
வாழ்வுக்காகப் போராடத் தயங்கி
வாழ்க்கையுடன் போராடும்.
சாவதற்காகப் பிழைத்துக்கொண்டு
பிழைப்பதற்காகச் செத்துக்கொண்டு...

•

பாரதி புத்திரன்

# புதிய கலாச்சார விழா

01.05.1991இல் பிலபீல்ட் நகரத்தில் நடைபெற்ற மே தின "புதிய கலாச்சாரவிழா" வுக்கு தாசன், வாசன் ஆகியோரும் போயிருந்தனர்.

தாசன்: இங்காலை தியேட்டரில படம். அங்காலை சங்கர், கணேஷ், சித்தாராவின்ரை நிகழ்ச்சி எண்டாலும் மண்டபம் நிறையச் சனம் புதிய கலாச்சார விழாப் பாக்க இருந்ததைக் கவனிச்சனியே?

வாசன்: ஓமோம். சனம் இப்பிடியான நிகழ்ச்சிகளைப் பார்க்க விரும்பிற இல்லை. சினிமா நடிக, நடிகையளை மட்டுந்தான் பார்க்க விரும்புவார்கள் என்டது பொய்யாப் போச்சு. நல்லாய் பிரச்சாரப் படுத்தி, நல்ல நிகழ்ச்சிகளும் அமைச்சால் சனம் வராமல் விடப்போகுதே.

தாசன்: வழக்கமாக தமிழாக்களின்ரை எல்லாக் கூட்டங்களிலையும் செய்யிற மௌன அஞ்சலியை இந்த விழாவிலை செய்யாததைப் பற்றி என்ன நினைக்கிறாய்?

வாசன்: நிகழ்ச்சி அமைப்பாளர் வடிவாய் சொல்லியிருந்தாரே. உணர்வுபூர்வமானது வெறும் சம்பிரதாயமாகிப் போயிருக்கிறதாலை மௌனஅஞ்சலி என்று எழும்பிநின்று விட்டு இருப்பதைவிட யாருக்காக நாங்கள் மௌன அஞ்சலி செலுத்த விரும்புகிறோமோ அவர்களுக்—காக எங்களால் இயன்றவரை உழைப்பதே உண்மையானதாயிருக்கும் என்று. அவர் சொன்னது சரிதானே.

தாசன்: ஆரம்பப் பேச்சு நீளமாய்ப் போச்சு. கிரகிக்கிறதும் கஷ்டமாயிருந்தது.

வாசன்: இப்படியான பேச்சுக்களை பக்கம் பக்கமாத் தயாரிச்சு வைத்து வாசிக்கிறதைவிட கொஞ்சமாயிருந்தாலும் நேரடியாகப் பேசுவது கூட ஈர்ப்பாயிருக்கும்.

தாசன்: சிங்கள நண்பரின்ரை பொங்கஸ் தனி ஆவர்த்தனத்திலை அவரின்ரை விரல்கள் இலாவகமாய் விளையாடிச்சுது. பிறகு நடந்த தவில்

சிதார் வாத்திய இசைக்கு ஒலி யமைப்பு ஒத்துழைக்கேலை.

வாசன்: தெரிஞ்ச பாட்டுக்களை வாசிச்சாலாவது கேட்க இன்றஸ்ராயிருந்திருக்கும் எண்டு எனக்குப் பக்கத்தில நின்றவர் சொன்னார்.

தாசன்: பாரதியார் பாடல்கள் எப்பிடி? ஒலி அமைப்புக் கோளாறு இந்த நல்ல நிகழ்ச்சியையும் நாசம் பண்ணியிட்டுது.

வாசன்: இரண்டு பாடகர்களுமே நன்றாகப் பாடினார்கள். பக்க வாத்தியங்களும் நல்ல ஒத்துழைப்பு.

தாசன்: கவியரங்கத்தையும் ஒலியமைப்பு சோடைபோகப் பண்ணியிட்டுது. பெண் கவிஞரின் கவிதைகளில் நல்ல கருத்துகள் இருந்தாலும் கவித்துவமற்ற நிறையச் சொல்லுகள் நெருடிச்சுது.

வாசன்: எதைச்சொல்ல வேண்டும் என்று தெரிந்துவைத்திருக்கும் கவிஞர் எப்படிச்சொல்ல வேண்டும் என்பதையும் கவனத்தில் கொண்டால் எளிய கவிதைகள் பிறக்கலாம். ஒரே சொற்களை 3 தடவைகளுக்கு மேல் பாவித்தால் இவர் போட்டியிலிருந்து விலக்கபடுகிறார் எண்டு எனக்குப் பக்கத்திலை நின்ற ஒராள் பகிடிவிட்டார்.

தாசன்: வழக்கமான பக்திப்பரவசமாக இல்லாமல் சிறுவர்கள் கிராமிய நடனம் வழங்கியது தரமாக இருந்தது. ஆனால் ஒரு நடனத்துடன் நிறுத்திவிட்டார்கள். தமிழர் கலாசார நிகழ்ச்சிகளைப் பார்க்க வரும் வேறு நாட்டவர்களுக்கு இப்படியான நிகழ்ச்சிகள் தான் புரியக்கூடியதாயும், ஆர்வமுள்ள-தாயும் இருக்கும்.

வாசன்: ஒரு முரண்பாட்டைக் கவனித்தாயா? நடனமாடிய உழவர்கள் பளபளக்கும் ஆடைகள் அணிந்து, கைகளிலும், கழுத்திலும் ஜொலிக்கும்நகைகளும் போட்டிருந்தார்கள். உழவர்களினதோ, உழைப்பாளிகளினதோ உண்மைநிலை இப்படியா இருக்கின்றது? கோவணத்துடனும், கிழிந்த சேலைத்துண்டுடனும் நாள்முழுக்க உழைத்து பசியுடன் மண்ணில் படுத்துறங்கும் உழவர்களின் நிலையை முழுவதுமாக இல்லாவிடினும் ஒரளவாகவேனும் படம்பிடித்துக் காட்ட வேண்டாமா? நடனக்குழு இதில் கவனமெடுத்திருக்கவேண்டும். இல்லை-யென்றால் ஏழைக் குடும்பத்தில் பிறந்தாலும் கதாநாயகன் அல்லது கதாநாயகி வெள்ளித்தட்டில் சாப்பிட்டு, பகட்டான ஆடைகள் அணிந்து ஆடிப்பாடுவதைபோல் ஆகிவிடும்.

தாசன்: குரலற்றவர்களின் குரல்கள் இன்னிசை நிகழ்ச்சியில் குரல்களைக் கேட்கவே முடியவில்லை. ஒலியமைப்பைத்தான் இதுக்கும் குறைசொல்லவேணும். பாட்டுகள் எப்

வானாவும், போனாவும்.



"அகதியளுக்கு காசு சேக்கவெண்டு சினிமாப்படம், கலாச்சார விழாவெண்டு சினிமா நடிகர், நடிகையள்.... இதைப் பற்றி என்ன நினைக்கிறாய்?"

"சிகரெட் பத்தறதுக்கு தாள் காசிலை நெருப்பு மூட்டியினம்"

இன்னன்னா

பிடி?

வாசன்: கேட்டால் அல்லவோ கருத்துச் சொல்லலாம். ஒகன் தன்னுடைய பாடு. பாடகர்கள் தங்களுடையபாடு.

தாசன்: தடைகள் தகர்க்கப்படுகின்றன நாடகம் நன்றாக இருந்தது. முற்போக்காக காட்டப்படும் ஒரு பாத்திரத்தைத் தவிர மற்றவர்களுடைய வசனங்கள் எல்லாம் யதார்த்தமாயும், அன்றாடவாழ்வியல் ஊடான நகைச்சுவையாகவும் இருந்ததைப் பராட்டலாம். இந்த நாடகம் எல்லோரையும் கவர்ந்ததுக்கு என்ன காரணம் எண்டு நினைக்கிறாய்?

வாசன்: வழக்கமான நாடகங்கள் இலங்கையைத் தளமாக வைத்தே அமைக்கப்படுகின்றன. ஆனால் இந்த நாடகம் ஜேர்மெனியை, எங்களின் அகதி வாழ்வைத் தளமாக கொண்டிருந்தது. இதனால் தான் பார்வையாளர்களிலிருந்து அந்நியப்படாத தன்மையைக் கொண்டிருந்தது எண்டு நினைக்கிறன்.

தாசன்: குறுகியகாலப் பயிற்சி என்றும், பயிற்சி போதாதென்றும் தெரிஞ்சிது. அகால நேரங்கள்வரை வாட்டியெடுக்கும் றெஸ்ரோறண்டுகளில் வேலை செய்துகொண்டு கிடைக்கும் சொற்பநேரத்தை இப்படியான முயற்சிகளுக்குப் பயன்படுத்துவது பெரியகாரியம்தான். இப்போதிருந்தே தொடர்ந்து கிரமமாகப் பயிற்சி செய்து கொண்டிருந்தால் அடுத்தடுத்த நிகழ்ச்சிகளை இன்னும் திறம்பட வழங்கலாம்.

வாசன்: பெண் பாத்திரத்தைப் பெண்களே செய்வதுதான் சிறப்பாயிருக்கும். இதற்கு இயக்குநரையோ, பொறுப்பாளரையோ குறை கூறாமல்

பெண்கள் முன்வந்து இப்படியான நிகழ்வுகளில் பங்களிக்கவேண்டும் எண்டு கேட்டுக் கொள்ளுறதுதான் சரியானதெண்டு நினைக்கிறேன்.

தாசன்: நாடகத்தின் கடைசிப் பாடலை திரையை மூடி விட்டுப் பாடியிருக்கலாம். அல்லது பாத்திரங்கள் அப்படியே காட்சியில் வருவதுபோல் இருக்கத்தக்கதாக பின்னணியில் பாடியிருக்கலாம். இந் நாடகத்தின் கதாசிரியரும், நடிகர்களும் இன்னும் பல நாடகங்கள் தொடர்ந்து தரவேண்டும்.

வாசன்: நாடகம் முடிந்ததுமே பலர் போய்விட்டார்கள். அரசியல் தஞ்சமும், எமது வாழ்நிலையும் என்ற தலைப்பில் நடந்த கருத்தரங்கு – பார்வையாளர்கள் குறைந்த இறுதிநேர நிகழ்ச்சிக்கேயுரிய ஒரு சோர்வுடன் நடந்தது. தலைப்புடன் பூரணமாக ஒட்டாவிட்டாலும் கலந்துகொண்ட மூவரும் தஞ்சம் தரும் இந்த அரசாங்கத்தின் உள் நோக்கங்களையும், அகதிகளின் அவல வாழ்வையும் ஓரளவுக்கு எடுத்துக் காட்டினார்கள்.

தாசன்: வெறும் பொழுதுபோக்கு அம்சங்களை மட்டுமேயுள்ளடக்காமல் இப்படியான நிகழ்ச்சிகளை தொகுத்து புதிய கலாச்சார விழாவை அமைத்தவர்களின் முயற்சி தொடரவேண்டும்.

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

# இப்படித்தான் நடந்தது.

■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■

*(தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டத்தில் மாறாத ஆழ்ந்த வடுவொன்றை ஏற்படுத்திய முஸ்லீம்களின் வெளியேற்றம் எவ்வாறு நிகழ்ந்தது என்பது பற்றிய ஒரு சிறு குறிப்பு இது; மனித உரிமைகளுக்கான யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர்களால் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் இருந்து பெறப்பட்டது. தமிழில்- ஜெயராஜ்.)*

■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■

*முப்பதாம் திகதி காலை ஏழரை மணியளவில் எல்லா முஸ்லீம்களையும் ஒஸ்மானியா விளையாட்டரங்கில் கூடுமாறு ஒலிபெருக்கிமூலம் அறிவிக்கப்பட்டது.*

*காரணம் தெரியாமல் திகைத்த முஸ்லீம்கள் அங்கே கூடினர். கூட்டத்தில் புலிகளின் தலைவர்களான கரிகாலன், ஆஞ்சநேயர் ஆகியோர் உரையாற்றினர். கரிகாலன் மட்டக்களப்பு நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக இருந்தவர். எல்லா முஸ்லீம்களும் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேற வேண்டும் எனவும், அவர்கள், அவர்களது தலைவர் எனப்படும் அஷ்ரப்பிடம்*

செல்லலாம் எனவும், அவர் அம்பாறையிலோ மட்டக்களப்பிலோ இடம்பெயரும் முஸ்லீம்களுக்கு உணவு, உறைவிடம் தருவார் எனவும் கரிகாலன் பேசினார். கிழக்கில் முஸ்லீம்கள் தமிழருக்குச் செய்ததுபோல கொள்ளை, கொலை, பாலியற் பலாத்காரம் போன்றன புரியப்படாது என அவர்களிடம் கூறப்பட்டது. அவர்களுக்கு உயிர்ப்பிச்சை வழங்கப்படுவதாகவும் கரிகாலன் கூறினார். இறுதியாக அவர்களுக்கு யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேற இருமணிநேர அவகாசம் வழங்கப்பட்டது. அவர்களது உடைமைகள் தமிழீழத்திலேயே சம்பாதிக்கப்பட்டன எனவும், அவர்கள் தம்முடன் 500ரூபாவையும், (சிலவேளை) ஒரு தங்கப்பவுணையும் கொண்டுசெல்லவும் அனுமதி வழங்கப்பட்டது. 10மணிக்கு அவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.

இந்த நடவடிக்கைகளுக்கு கற்பிக்கப்பட்ட நியாயம் ஏறத்தாழ 1983 கலவரத்துக்குக் கற்பிக்கப்பட்டது போலவே இருந்தது. 1983இல் அரச அமைச்சர்கள் பேசிய அதேதொனியில் புலிகளின் தலைவர்கள் பேசினர். இந்தப் புலித்தலைவர்கள் தமிழரின் வரலாற்றை அறியாமல் இருந்திருக்கலாம். ஆனால் அவர்கள் அவ்வாறான சூழலில் சரியான சுபாவத்தைக் கொண்டிருந்தனர்.

இருமணி நேரத்துக்குள் எதை எடுப்பது, எதைவிடுவது என்று அதிர்ச்சியடைந்த முஸ்லீம்கள் தடுமாறினர். இந்த அறிவிப்பால் குழப்பமுற்ற முஸ்லீம்களின் அயலவர்களும், நண்பர்களுமான தமிழர்கள் முஸ்லீம்களுக்கு உதவச் சென்றபோது அவர்கள் தடுக்கப்பட்டனர். 12மணிக்கு மனோகரா தியேட்டர், ஓட்டுமடம், ஐந்துசந்தி உட்பட வேறும் சில இடங்களுக்கு சோதனைக்கு முஸ்லீம்கள் செல்லவேண்டியிருந்தது. மனோகரா தியேட்டர் அருகே ஆண்கள் சைக்கிள்களை வீதியின் மறுபுறம் நிறுத்துமாறு கூறப்பட்டு, நடுவீதியில் சோதனை இடப்பட்டனர். பெண்கள், பெண்புலிகளின் சோதனைக்காக உள்ளே அழைத்துச் செல்லப்பட்டனர். சோதனை மிகவும் இழிவுபடுத்துவதாக இருந்தது. தமது வாழ்வில் கடினஉழைப்பால் சேமித்த பொருட்களை கொண்டுசெல்பவர்கள் கிரிமினல்கள் என்ற ரீதியில் சோதனை செய்தவர்கள் செயற்பட்டனர். ஒரு பெண், மார்பு உள்ளங்கி கழற்றுவிக்கப்பட்டு நகைகளுக்காக சோதனை இடப்பட்டார். ஒரு பெண்புலியால் சிறுமி ஒருத்தியின் காதணி கழற்றப்பட்டது. மறுகாதணியைக் கழற்றுவது சிரமமாக இருந்தபோது காதுடன் அது பிடுங்கப்பட்டது. கிழிந்த, குருதி சொட்டும் காதுடன் சிறுமி விடப்பட்டாள். பறிக்கப்பட்ட முக்கிய பொருட்களில் சொத்து உறுதிகள், ஜனசவிய ஆவணங்கள் என்பன அடங்கும். சில பெண்புலிகள், தாம் முன்புகேட்ட இரண்டு பவுண் நகையைத் தராமல் விட்டதற்குரிய பாடம் முஸ்லீம்களுக்கு புகட்டப்பட்டுவிட்டது என எக்காளமிட்டனர். இதற்காகவே தாம்

புத்திசாலித்தனமாக இரண்டு மணி நேர அவகாசம் வழங்கியதாக அவர்கள் கூறினர்.

ஐந்துசந்தி, உரும்பிராய், சுன்னாகம் பகுதிகளில் கடைவைத்திருக்கும் ஒரு தையல்காரர் தனது முதலீடு அனைத்தையும் இழந்தவர். ஆறு குழந்தைகளைப் பராமரிக்கும் பொறுப்பு அவருடையது. வெளியேற்றத்தின்போது அவர் ஒரு வானில் தனது பொருட்களையும் ஏற்றி குடும்பத்துடன் செல்ல ஆயத்தமாகினார். அவரது கெஞ்சலுக்கு இடையே புலிகளால் அவர் வானிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டு, வேறு வானில் செல்லுமாறு பணிக்கப்பட்டார். இரவு 9மணிக்கு ஒரு லொறியில் அவருக்கு இடம் கிடைத்தது. கொழும்பில் அவர் அகதி முகாமொன்றை வந்தடைந்தார். இருவார முடிவுவரை அவர் குடும்பம் பற்றிய எந்தத் தகவலும் அவருக்குக் கிடைக்கவில்லை. நம்லான் (49) என்பவரின் மனைவியான தமீமா(37) மனரீதியாகப் பாதிப்புக்கு உள்ளாகி சிகிச்சை பெற்றுள்ளார். கடைசிச் சோதனையில் அவர்களிடமிருந்த 25,000 ரூபா பெறுமதியான பணம், நகைகள் களவாடப்பட்டன. தமீமாவின் சிநேகிதியும் அயலவருமான ஆஸியா(37) துக்கம் தாளாமல் பயணத்தின்போது மரணமானார். அவரது உடல் கொழும்பில் அடக்கம் செய்யப்பட்டது. சில முஸ்லீம் இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் தாக்கப்பட்டதாகவும், தடுத்துவைக்கப்பட்டதாகவும் முஸ்லீம்கள் சிலர் கூறினர்.

முஸ்லீம்களின் தகவல்படி 28முஸ்லீம்கள் (யாழ்ப்பாணம் 15, சாவகச்சேரி 3, மன்னார் 10) பலகோடி ரூபாய்களுக்காக பணயக்கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் முபீன் (பிரபல வர்த்தகர், முன்னாள் ஐ.தே.க. அமைப்பாளர், யாழ்ப்பாணம்), சுல்தான் (சாவகச்சேரி), சுப்றான் (இஸ்லாமியத் தலைவர்), தாஹிர் (தையல்காரர்), தெலீஸ் என்போர் அடங்குவர். முபீனின் மனைவி தனது கணவனை ஒருமுறை காட்டுமாறு புலிகளிடம் கெஞ்சினார். அவர்களது சொத்தை கொழும்பில் விற்று ஒருகோடி ரூபாவைத் தம்மிடம் தருமாறு புலிகளால் அவர்களுக்குக் கூறப்பட்டது●

நன்றி: சரிநிகர்

---

புதிய கலாச்சார விழா (தொடர்ச்சி)

இந்த வகையான முயற்சிகள் மூலமே சீரழிவுக் கலாச்சாரங்களை எதிர்க்க முடியும். அதேநேரம் நிகழ்ச்சிகளைச் சேர்ப்பதிலும், அரங்க அமைப்புகளிலும், இவற்றைப் பிரச்சாரப்படுத்துவதிலும் உரிய கவனம் எடுத்தாலே இவை எல்லோருக்கும் போய்ச்சேரும்.

●

நேசநாயகன்

ஈழத்திலிருந்து

# தேசத்தின் அற்புகள்

பிரஜைகள்

"யாரது? சமூக விரோதியா? வா வா" என்று வரவேற்றார் நண்பர்.

கேற்றைத் திறந்துகொண்டு உள்ளே நுழையும் போதே இப்படி அவர் வரவேற்றதும் ஒன்றும் புரியாமல் நான் திரும்பிப் பார்த்தேன்.

"வேறை யாரையும் அல்ல, உன்னைத்தான்... வாவா" என்றபடி எழுந்து வெளியே வந்தார் நண்பர்.

"எப்படிப் போகிறது உனது புத்திஜீவித வாந்தியெடுப்பு" என்று அவர் திரும்பவும் கேட்ட போதுதான் எனக்கு இந்த 'சமூகவிரோதி', 'புத்திஜீவித வாந்தி' எல்லாமே ஞாபகத்துக்குள் வந்தது.

"சமூகவிரோதி...! அருமையான பட்டந்தான்" என்று முணுமுணுத்தார் நண்பர்.

"நல்லவேளை.. சொன்னவர் கையில் துவக்கில்லாதது எவ்வளவு பெரிய பாதுகாப்பு" என்று சிரித்தேன் நான்.

"பரவாயில்லை நீ.. அருமையானதொரு பட்டப் பெயர் உனக்குக் கிடைத்திருக்கிறது. நீ சந்தோசப்படலாம்" என்றார் நண்பர்.

"உண்மையிலை யோசித்துப் பார்த்தால் பட்டம் எனக்கல்ல, உனக்குத்தான் வழங்கப்பட்டிருக்கிறது! அதுசரி.. அதிலே சந்தோசப்பட என்ன இருக்குது? உண்மையில் இவர்கள் விசயத்தை புரிந்துகொள்ளவே இல்லை என்று எனக்குக் கவலையாகத்தான் இருக்கிறது..." எனக்கு அந்த வாசகர் கடிதங்களை வாசிக்கும்போது கவலையாகத்தானிருந்தது.

"கவலைப்பட என்ன இருக்கிறது... முதல்லை உதிலை இரு. ஆறுதலாய் கதைப்பம். இன்

டைக்கு நான் நல்ல ஓய்வா இருக்கிறன். தூண்டில் கடிதங்கள் என்னை இன்னும் உற்சாகப்படுத்தியிருக்கு...." என்று சொல்லி விட்டு உட்கார்ந்தார் நண்பர்.

இருவரும் அமர்ந்தபடியே பேசத் தொடங்கினோம்.

உரையாடலைத் திரும்பவும் நானே தொடங்கினேன்.

"இந்தக் கடிதம் ஏன் உனக்குச் சந்தோசத்தைத் தருகிறதெண்டிறாய்?"

"சமூகவிரோதி எண்டது சமூக நியதிகளுக்கு விரோதமான போக்குள்ள ஒருவருக்கு கூறப்படும் பெயர். சமூக நீதி, நியாயங்கள் சரியென அங்கீகரிக்கிற ஒருவர் அதற்கு விரோத-மாக இயங்குபவரை சமூக விரோதி என்கிறார். அல்லதுதான் நினைப்பதே சமூக நீதியாக இருக்கவேணும் என்று கருதுவார். அதற்கு விரோதமான போக்கைக் கொண்டிருப்பவரை சமூக விரோதி என்கிறார். அந்த வாசகருக்குச் சில சமூக நீதிகள், கருத்துகள் உண்டு. அவை எங்களுடையவைக்கு முரணானவை. எனவே அவர் உன்னைச் சமூக விரோதி என்கிறார். சமூகவிரோதிக்கு அவர் வழங்கும் தண்டனை உனது கட்டுரையைத் தூண்டி லில் பிரசுரிக்க வேண்டாம் என்பது. அவரது சமூக நீதி சரியானது என அவர் நம்பும்வரை அவருக்கு நீ சமூக விரோதிதான்!! ஆனால் அது தவறென்று உனக்கே விளங்குவதால் நீ ஏன் கவலைப்படவேணும். சந்தோசப்படவேண்டியதுதானே. மாற்றுக் கருத்துள்ளவர்களால் பாராட்டப்படுவதைவிட திட்டப்படுவதே நாம் சரியாகச் சொல்கிறோம் என்பதற்குச் சரியான அறிகுறி!.."

நான் கொஞ்ச நேரம் மௌனமாக இருந்தேன். "உண்மையில் அந்த வாசகர் பயன்படுத்திய சொல் 'மக்கள் விரோதி' என்பதே. தூண்டிலின் கடலோடிகளே 'சமூக விரோதிகள்' என்ற சொல்லைப் பாவித்திருக்கிறார்கள். மக்கள் விரோதிகளும், சமூக விரோதிகளும் ஒன்றா?" எனக்குத் தெளிவாக இல்லாததால் நண்பரிடமே கேட்டுவைத்தேன்.

"மக்கள் விரோதம் என்பது என்ன? மக்களின் நலன்களுக்கு விரோதமானதுதானே? மக்கள் நலன் பேணும் கருத்துகட்கு விரோதமான கருத்துத்தா-னே? அதாவது சமூக நீதிகட்கு விரோதமானது. கடலோடிகள் அப்படி எழுதியதில் தப்பில்லை. மக்கள் விரோதிக்கும், சமூக விரோதிக்கும் ஒரே தண்டனைதான்; மரணதண்டனை யாழ்ப்பாணத்தில். நீ தப்ப முடியாது" என திரும்பவும் சிரித்தார் நண்பர்.

"சரி இப்ப சொல்லு. மனித உரிமைகளுக்காக குரல் கொடுப்பவர்களைப் பற்றி நீ சொன்னது பிழைதானே..?"

"ஏன் அதிலை என்னபிழை? அது ஒருவகையிலை எதிரியை அ

ம்பலப்படுத்த உதவத்தான் செய்யுது. ஆனால் அது ஒரு நோக்கமுமில்லாத அம்பலப்படுத்தல். மாற்றத்தைப் பற்றி அக்கறைப் படாத விபரம் திரட்டல். அதுவும் தேவைப்படும் என்பது உண்மைதான். ஆனால் அது எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது. சிங்கத்திடம் அது கொன்றுதின்ற விலங்குகளின் பட்டியலைச் சேர்த்துக் காட்டி மாமிசம் தின்ன வேண்டாம் என்று சமரசம் செய்விக்க முடியுமா? ஆனால் அந்த முயற்சியிலும் பயன் இருக்குது தான். அதுவும் பாராட்டப்பட– வேண்டியதுதான்... நான் சொன்னதெல்லாம் மனிதாபிமான அடிப்படையில் சிந்திக்கிறவர்களே செய்துவிடக்கூடிய அந்த வேலையில் கொஞ்சமாயினும் அரசியல் ரீதியாகப் பிரச்சினைகட்கு முகங்கொடுக்கும் விதத்தில் சிந்திக்கிற நாம் ஈடுபடவேண்டுமா? அதைவிடவும் அவசியமான, பிரயோசனம் மிக்க விடயங்களை நாம் செய்யமுடியும்; செய்யவேண்டும் அல்லவா என்றுதான்.." என்றார் நண்பர்.

"ஆனால் வாசகர் இது அவர்களின் பணியைக் கொச்சைபடுத்தும் செயல் என்றல்லவா சொல்லியிருக்கிறார்..."

"உண்மையில் யாருடைய பணியையும் கொச்சைப்படுத்தும் நோக்கம் எமக்கு இருக்கவில்–லை என்பதை நிதானமாகப்பார்த்தால் புரிந்துகொள்ளலாம். சர்வதேச மனித உரிமைகள் சாசனத்தின் விதிமுறைகள் புத்தகத்தில் அழகாக இருக்கின்றன. அவை மீறப்படுவது குறித்து மனிதாபிமானிகளால் தயாரிக்கப்பட்ட பெயர்பட்டியல்களும் – வொல்யூம் வொல்யூமாக வந்துள்ளது. ஆயினும் என்ன? லத்தீனமெரிக்க நாடுகள் முதல் ஆசிய, ஆபிரிக்க நாடுகள்வரை எல்லாவிடங்களிலும் மனித உரிமை மீறல்கள் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. இலங்கையில் கடந்த இரண்டாண்டுகளில் 60, 000 பேர் காணாமற் போயுள்ளனர். கந்தசாமி கடத்திச் செல்லப்பட்டுக் கொல்லப்பட்டது உலகம் முழுவதும் அம்பலமான பின்தான் ராஜினி, விமலேஸ்வரன் ஆகியோரும் கொல்லப்பட்டார்கள். பிரச்சினை இங்கு என்னவென்றால், கொலைகள், காணாமற் போதல்களைப் பட்டியலிடுவதுடன் திருப்திப்படுவதா அதற்கும் அப்பாலே போகவேண்டுமா என்பது தான். கோபம் – புலியைப் பற்றி நாங்கள் பேசிறதைப்புரிந்து கொள்ளாததால் வருகிற கோபம்– கண்ணையும் மறைத்துப் புத்தியையும் சிறைப்பிடிக்கிறது. அதனால் சொற்களின் உள்ளார்ந்த அர்த்தத்தைப் பற்றிக் அக்கறைப்படாமல் சீறுகிறார்கள்... இதையிட்டு நாம் கவலைப்படவேண்டுமா என்ன! உண்மையில் எனக்குச் சந்தோசமே. ஏனென்றால் இப்படியான அபிப்பிராயங்கள் எதிர்மறை வழிகாட்டிகளாக எங்களுக்குப் பல விடயங்களை இன்னும் ஆழமாகச் சிந்திக்க உதவுகின்றன..."

யோசித்துப் பார்த்த –

போது எனக்கும் நான் கவலைப்பட்டதற்காகச் சிரிக்கலாம் போல இருந்தது. விடயங்கள் ஆராயப்படாமலே நிராகரிக்கபடுவதுதான் எமது கடந்தகால இடதுசாரிகளது பாரம்பரியத்தின் தோல்விக்கு அடிப்படையே.. ஆனால் அது இன்னும் கூடப் புரிந்துகொள்ளப்படாமல் இருப்பதுதானே வேதனை! சொல்லப்படுவது சரியா, தவறா என்று கருத்து ரீதியாக விவாதிக்காமல் 'புத்திஜீவித வாந்தி' போன்ற சொற்களால் முத்திரை குத்தி ஒதுக்கிவிடுவது ஆரோக்கியமான விவாதத்துக்கு அழகல்லதான். ஆனால் என்ன செய்வது! விவாதங்கள் அப்படித்தான் உருவாகும் என்பதுதான் எமது விதி போலும். போதாக்குறைக்கு ஒருவாசகர் சிவத்தம்பியையும் இதற்குள் இழுத்திருந்தார்!

"சிவத்தம்பியை இதற்குள் இழுத்தது பற்றி என்ன நினைக்கிறாய்?"

"நினைக்க என்ன இருக்குது? சிவத்தம்பியை எடுத்து மேற்கோளாக்கிய அந்த வாசகர் சொன்ன மேற்கோளுக்குள் உள்ள சிவத்தம்பியின் வாசகம் சரியானது என்பதைக்கூடக் கவனிக்காமல் 'ஓங்காளிப்பு' என்று ஒதுக்கிவிடுகிறார். சிவத்தம்பி தனது பாணியில் சொல்லியிருக்கும் அந்தக் கருத்தில் ஓரளவு உண்மை இருக்கத்தான் செய்கிறது. நிதானமாக யோசிப்பவருக்கு இது தெரியும். 'புத்திசீவி' எதிர்ப்பு புலிகளிடம் மட்டுமல்ல புலி எதிர்ப்பாளர்களிடமும் இருப்பதுதான் வேடிக்கையாக இருக்கிறது. புலிக்கும், தீவிர புலி எதிர்ப்பாளர்கட்கும் உள்ள அடிப்படைச் சிந்தனை ஒன்றுதான். புலி போன்ற இன்னொரு இயக்கத்தை புலிக்கு மாற்றாகக் கட்டுவதுதான் அவர்களது எண்ணமாக இருக்கிறது. இவ்வளவு எழுதிய அந்த வாசகர் 'ஏகாதிபத்தியச் சார்பு எதிர்ப்புரட்சிகர யுத்தத்திற்கும், தேசிய விடுதலைப் போராட்டத்திற்கும் இடையிலுள்ள இணக்கம் காண முடியாத முரண்பாட்டை' பற்றி எழுதியிருந்தால் அதிகளவு பிரயோசனமாக இருந்திருக்கும். குறைந்தபட்சம் தேசிய விடுதலைப் போராட்டம் எப்படி அமைய வேண்டும் என்றாவது குறிப்பிட்டிருக்கலாம். ஆனால் அவர் சிவத்தம்பியையும் எங்களையும் சாடுவதில் காட்டும் அக்கறையை அதில் காட்டவில்லை. போகட்டும். ஆனால் நந்தினி என்ற வாசகர் ஒரு கேள்வி எழுப்பியிருந்தாரே கவனித்தாயா?"

"என்ன?" என்று கேட்டேன் நான். எனக்கு உடனே ஞாபகப்படுத்திக்கொள்ள முடியவில்லை.

"எங்களது புலி பற்றிய மதிப்பீடு புலிகளை நியாயப்படுத்துவதுபோல அமைந்துள்ளதாக கூறுகிறாரே அதுதான்"

"ஓ... அது இதுக்கு முந்தின தூண்டில். உயர்சைவ வேளாளர்களுடன் சேர்ந்து தாழ்த்தப்பட்டவர்களை புலி நசுக்கா

தா எனக் கேட்டாரே அவ ரா?"

"ஓமோம் அவர்தான்"

"ஞாபகம் வருகிறது. ஆ னால் அதிலை என்ன? அவரது எ ல்லாக் கேள்விகளுக்கும் நாங் கள் ஏற்கெனவே பேசியவற்றில் பதிலிருக்குத்தானே? புலி எதைச் செய்யும், செய்யாது என்று நாம் எதிர்வு கூறவில்லையே. புலி எப்படி இருக்கிறது என்ப தை மட்டுமே நாங்கள் சொன் னோம். புலிகளின் நடவடிக்கைக ள் 'சாதாரண தவறுகள்' என நாம் நினைக்கவில்லையே. அவை அம்பலப்படுத்தப்பட வேண்டிய- வை என்றுதானே பேசினோம். ஒருவகையில் புலியின் போராட் டத்தின் தோல்விக்கே அவைதா ன் காரணம் என்றும் சொன் னோம்தானே?"

"சரிதான். நான் ஏன் கேட்டேனென்றால் நந்தினியின் கடிதத்தில் சில நியாயமான ச ந்தேகங்களும், கேள்விகளும் எழு ப்பப்படுகின்றன. மற்றைய இர ண்டு வாசகர் கடிதங்களிலுமோ வெறும் ஆத்திரம்தான் தெரிகி றது என்று காட்டுவதற்காகத்- தான். நாங்கள் செய்தது புலி கள் பற்றிய ஒரு மதிப்பீடு மட் டுந்தான். மதிப்பீட்டை நியாயப் படுத்தலாகப் பார்ப்பது தான் அந்த வாசகரின் பிரச்சினை. அது உண்மையில் எங்கள் சம்பா சணையைக் கவனமாகப் படித் தால் தீர்ந்துவிடும். அந்த மதிப் பீடு ஒருவகை அரசியல் இன ங்காட்டல்தான் என்பதைப் பல ர் விளங்கிக்கொள்ள மறுக்கி- றார்கள். வழமையான 'பாசி சவெறியர்கள்' என்ற வார்த்தை யைப் பாவிக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள் போலும் வார்த்தைகள் கொண்டிருக்கும் அர்த்தத்தைப் பற்றிக் கவலைப் படாமலே அவற்றைப் பாவித் துப் பழகிப்போவதால் வந்த சிக்கல் இது. முதலாளித்துவ தே சியவாதம் என்பது புலிகளை நியாயப்படுத்தாது; பதிலாக அதன் போதாமையை வலியுறுத் தி மூன்றாவது பாதையைத் தே டவைக்கும்..."

"இப்படித்தான் அவர்கள் ஐக்கிய முன்னணி பற்றிப் பேசு வதும்! அவசரப்பட்டு முடிவுக்கு வருகிறார்கள். நிதானமாகப் ப டித்தால் அதுவும் விளங்கி விடும் இல்லையா?" என்றேன் நான்.

"விளங்க வேணும். ஆனா விளங்கினதாய் தெரியவில்லை. புலிகள் பிற சக்திகளுக்கு சன நாயகத்தை வழங்கவும், ஐக்கிய முன்னணியைக் கட்டவும் தயாரா க இருந்தால் மட்டுமே அவர் கள் வெற்றிபெற முடியும் என்று நாங்கள் புலிகளது அரசியல் நிலை பற்றிப் பேசினால் இவர் கள் புலிகளுடன் ஐக்கிய முன்னணி கட்டுமாறு நாம் பிற சக்தி களை அழைத்ததுபோல ஆத்திர ப்படுகிறார்கள். ஐக்கிய முன்னணி பற்றி நாம் பேசியதை தூண்டி லுக்கு கடிதம் எழுதிய வாசக ரும் சரி, 'சிந்தனை' சஞ்சிகையு ம் சரி கவனிக்கவே இல்லை.

அவலை நினைத்து உரலை இடித்த கதையாக 'சிந்தனை' சீறி தள்ளியிருக்கிறது! தனக்கும் இன்னொரு இயக்கத்திற்கும் உள்ள பிரச்சினையை அது எங்களில் ஏற்றிப் பார்ப்பதுதான் வேடிக்கை" என்று சிரித்தார் நண்பர்.

எனக்கும் சிரிப்பு வந்தது. ஆனால் நான் நண்பரைச் சந்திக்க வந்ததற்கான விடயத்தை கதைக்காமல் விட்டுவிட்டு வேறெதையோ பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறேன் என்பது திடீரென ஞாபகத்துக்கு வந்தது. எனவே எனது சிரிப்பை நிறுத்திவிட்டு "நான் வந்ததை மறந்துபோய் வேறை விசயத்தைப் பேசிக் கொண்டிருக்கிறேன்" என்று தொடங்கினேன்.

"என்ன விசயம்? பிரேமதாச புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு வரும்படி திரும்பவும் அழைத்ததா?"

"இல்லை. அதிலை என்ன புதுமை இருக்கிறது. அவன் ஒரு புறம் சமாதானம், அரசியல் தீர்வு என்று சொல்லிக்கொண்டு தான் இருக்கிறான். மறு பக்கத்திலை சண்டை நடந்து கொண்டு தான் இருக்குது. போனகிழமை வரை காரைநகரிலை நடந்த சண்டையிலை 500பேருக்குமேல பொதுசனங்கள் செத்துப்போச்சாம். ஏன் இண்டைக்குப் பேப்பரைப் பாத்தனியே? வவுனியாவில கொழும்புக்குவர இடிபட்ட சனகூட்டத்துக்கு வெடிவைச்சு 3 பேரைச் சாக்காட்டிப் போட்டாங்கள்... நான் பேச வந்தது வேறை.."


"என்ன?"

"பிரான்ஸிலை இருந்து 'சமர்' என்டு ஒரு சஞ்சிகை வந்தது பாத்தியா?"

"பாத்தனான். ஏன்? புலியளைத் தரகுமுதலாளியத்தின் பிரதிநிதிகள் என்டமாதிரி சொல்லியிருக்கிறாங்கள் அதுதானே கேக்கிறாய்?"

"ஓம். அதைப் பற்றித்தான் பேசவந்தனான்"

வானாவும், போனாவும்.




இன்னன்னா

"சமர் தரகு முதலாளித்துவப்போக்கு எண்டு எழுதுது. 'மனிதம்' குறுந்தேசியவாதம் எண்டு எழுதுது. இன்னும் சிலர் பாசிசம் எண்டும் சொல்லுகினம். இவையெல்லாரும் புலிகளின் வெவ்வேறு பகுதிகளைப் பார்த்து இப்பிடிச் சொல்லுகினம். ஆனால் இப்பிடிச் சொல்லுற கனபேருக்குத் தாங்கள் சொல்லுற சொற்களின்ரை அர்த்தமே புரியவில்லை..."

"எனக்கு நீ சொல்லுறது தான் புரியேலை"

"உண்மையிலை 'சமர்' சொல்லுறதுபோல புலியள் தரகுமுதலாளியப் போக்குள்ளவர்கள்தானா என்பது ஆய்வுக்குரியது. ஏனென்றால் அப்படி அடித்துச் சொல்ல இருக்கும் காரணங்களைப் போலவே இன்னும் சரியாகச் சொல்லுவதானால் அப்படி இல்லை என அடித்துச்சொல்லவும் காரணங்கள் இருக்கின்றன. உதாரணமாக புலியள் தமிழ் தரகுமுதலாளியத்தின் போக்கை காட்டுவார்கள் என்றால் ஏன் அவர்கள் த.வி.கூ. போல இன்னமும் விட்டுக்கொடுத்துச் சரணடையவில்லை? அவர்களிடம் ஒரு தேசியவாதம் இருக்கிறது. அது நிச்சயமாக முதலாளித்துவதேசியவாதமே. அது 'தேசிய முதலாளித்துவ' அடிப்படையிலமைந்த தேசியவாதமா? அல்லது 'தரகு முதலாளியத்தின்' தேசியவாதமா என்பதைப் புலிகளின் சில இயல்புகளை வைத்து முடிவு கட்டிவிட முடியாது. 'சமர்' இடம் அவசரம் தெரிகிறது. அதாவது தரகு முதலாளியக் கட்சிகளின் இயல்பினைப் புலிகளின் இயல்புடன் பொருத்திக் காட்டுவதில் உள்ள அவசரத்தினால் பிரச்சினை ஆராயத் தேவையான நிதானத்தை இழந்துவிடுகிறது"

"ஆனால் 'சமர்' இடம் ஒரு தேடல் ஆர்வமும், அரசியல் அக்கறையும் இருப்பதை நீ ஏற்கவில்லையா?"

"இருக்கிறது. அதற்காக நாம் அதைப் பாராட்டத்தான் வேணும். 'சமர்' பத்திரிகையில் வெளிவந்த இந்தக் குறிப்பிட்ட கட்டுரை தொடர்பானதே எனது விமர்சனம். முற்றப்படி அந்தப் பத்திரிகை முயற்சி வரவேற்கப்படவேண்டியதே.."

"உனது முதலாளித்துவத் தேசியவாதம் தொடர்பாக அவர்கள் கிளப்பியுள்ள பிரச்சினையைக் கவனிக்கவில்லையா?"

"கவனித்தேன். எமது தேசத்தில் தேசிய முதலாளிகள் இல்லாதபோது எப்படி முதலாளித்துவ தேசியவாதம் உருவாகலாம் என்று கேட்கிறார்கள். அந்தக் கேள்வியும் ஒரு நிதானமற்ற கேள்விதான். நான் சொன்னதை அவர்களும் சரியாகக் கவனிக்கவில்லை. நான் முதலாளியத் தேசியவாதம் பற்றிக் கதைத்தால் அவர்கள் தேசியமுதலாளித்துவம் பற்றிப் பேசுகிறார்கள்.

(தொடர்ச்சி 36ஆம் பக்கம்)

எரிவு. நினைப்பெல்லாம் ஒரே எரிவு. எப்படியான எரிவு என்பதை உவமான உவமேயங்களால் விளங்கப்படுத்தாவிட்டால் சிறுகதை என்றுகூடச் சில பேர் இதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆனால் இது உவமான உவமேயங்களின்றை, மொழியின்றை ஆளுமையைத் தாண்டின எரிவு.

"மடையன். அமெரிக்கத் தயாரிப்புத்தான் எரிச்சலை தணிக்கும் எண்ட மாதிரி மல்புறோ சிகறெட் வாயிலை அரைவாசி எரிந்தபடி...."

"விளப்பம் கெட்டபயல்"

"ராஸ்கல்"

"ஆறு புதுக்கலண்டர்வந்து போட்டுது. ஆனால் இது இன்னும் நகராமல் அந்த இடத்திலேயே குந்திக்கொண்டு..."

"ஒருவேளை விசரோ ? அல்லது நம்பிக்கை வறண்டுபோச்சோ?"

விமர்சனங்களின் விரிவு தொடரும்.

* * *


அமுதன் வருவான் வருவான் என்று பெற்றவர், உற்றவரும் கொலை செய்யப்பட்டான் என மிகச் சிலரும், அவன் சரியான தண்டனை பெற்றான் என்று பல 'ஆயுதங்களும்' பேசிக் கொண்டனர். இதுதானே எரியுது. இன்னமும் எரியுது....

எங்களுடைய விடிவிலை இந்தியா கொண்ட 'பரிவையும்' பங்கையும் உரிச்சுக் காட்டுவது மாதிரி ஆயிரமாயிரம் சவுக்க மரங்கள் இந்திய அரசாய் பயிற்சி முகாமைச் சுற்றிக் கண்காணித்தபடியும், இடைக்கிடை எமது மக்களின் அவல ஓலங்களை நினைவுக்குக்கொண்டுவரும் காற்றின் ஊளைகளும், இவற்றை மீறிய விசில் சத்தமும், உளவுப்படையின் இரை தேடும் கண்களும்..... எல்லாமே சுறுசுறுப்படைந்தன.

* * *

முகாமுக்குப் பொறுப்பாயிருந்த அமுதன் உளவுப்படையால் கடத்திவரப்பட்டு கட்டிப் போடப்பட்ட தடியனோடு ஓடிவிட்டானாம்.

தலைகள் வெளியேறும்போது பிரிதலாம். ஏனையவர்கள் வெ



வெளியேறும்போது வெறும் ஓட்டம்தானாம். உண்மைதான்! இயக்க அகராதியில் இன்றுவரைபல புதுச்சொற்கள் உருவாகியிருக்கின்றன.

"தலைவர் முன்பு மற்ற இயக்கத்தில் இருக்கும்போது இந்தத் தடியனும் கூட இருந்தவனாம்"

"இந்த இரண்டுபேரும்தானாம் அந்த இயக்கத்தின்ரை — சார்பிலை முதல் முதல் வெளிநாட்டிலை மக்கள் 'மீட்பு' க்காக இராணுவப் பயிற்சிபெற்றவங்களாம்"

பேச்சுத் தமிழும், எழுத்து தமிழும் கலந்த சலசலப்புகள்.

"கூட இருந்த பாசத்திலைதான் இந்தத் தடியன் முகாமிலை இருக்கேக்கை ஆகக் குறைஞ்சது அவன்ரை நகத்தைக் கூடப் பிடுங்க வேண்டாமென்று தலைவற்றை உத்தரவு!". இரண்டு பிணந்தின்னிகள் சலித்துக் கொண்டன.

"தலைவனும், தடியனும் பெற்ற இராணுவப் பயிற்சியை இவன் அவனைப் பிடிப்பதற்கும், அவன் இவனிட்டையிருந்து காவற்காரனோடை தப்பிப் போவதற்கும்தான் முழுசாய் பயன்படுத்தியிருக்கிறாங்கள் போலத் தெரியுது"

பயிற்சி முகாமிலை இருக்கிற எல்லாப் பொடியளுக்கும் அமுதனிலை சரியான விருப்பம். அவனுடைய இருபத்திநாலு மணிநேர சுத்த இராணுவத்தனமும் அட்டகாசமும், தோழமை, தோழர்கள் பற்றிய நடைமுறைகளும் கேள்விப்பட்டபோது என்னால் நம்பவே முடியவில்லை. முதல் முதலாக நான் அமுதனைச் சந்தித்தபோது அவன் ஒரு மனுச—னாகத்தான் இருந்தான். மக்களைப் பற்றியும், மண்ணைப் பற்றியும் அவனுடைய புரிந்துணர்வும், விடுதலை பற்றிய அவனுடைய கூர்மையான பார்வையும்...... அனைத்தும் உண்மைகள். இவனிலிருந்து நான் கண்டுகொண்டது எங்களுடைய இயக்கங்கள் விளங்கிக் கொண்டபடி மனித விடுதலைக்—கான போராட்டம் என்பது மனிதத்திலை இருந்து விடுதலை பெற்று இயந்திரமாகிறது போலை...!

அடுத்தநாள் அமுதனைக் கட்சி, விசுவாசம், மக்கள், கடமை, மன்னிப்பு... என்றெல்லாம் காரணங்காட்டி அவன் முகாமைவிட்டுப் போனபோது கொண்டுபோன ஆயுதத்தைப் போட செய்து பிடித்துவிட்டார்கள். தடியன் அன்றுவரை தப்பினவன்தான். வெளிநாட்டுப் பயிற்சி அன்றோ! இவர்கள் இருவருக்கும் அடைக்கலம் கொடுத்த தமிழ்நாட்டு — நாட்டாண்மை அமுதனைப் பிடித்துவருவதை ஷொட் கன்னால் தடுத்தபோது இவர்கள் மெஷின் கன்னால் வென்றுவிட்டார்கள்.

நாட்டாண்மையின் சொந்த ஊரில் சிறிது குழப்பந்தான். தமிழ்நாட்டில் ஈழப் போராளிகள் அனைவரையும் ஒட்டுமொத்

தமாக விடுதலைப் புலிகள் என்று அழைத்த காலம்! ஒரு பயிற்சி முகாமைப் பார்வையிட்ட ஊர்ச்சனங்கள் உதிர்த்த ஆச்சரியம் "என்னங்க விடுதலைப் புலி எங்கிறீங்க. நம்மளை மாதிரியே இருக்கீங்களே!!!". வாழ்க தமிழகம்!

அமுதன் முன்பு பொழுப்பாக இருந்த முகாமுக்கேகொண்டுவரப்பட்டான். இந்த இயந்திரத்தை ஏற்கெனவே இதன் மீது பாசம் வைத்திருந்த அரை, முக்கால் இயந்திரங்கள் சவுக்கம் கட்டைகளால் அடித்துச் சிதைத்தனவாம். கண்ணீர்விட்டுச் சுதந்திரப் பயிர் வளர்த்த முழு இயந்திரமொன்று பாரதியின் பாடலைப் பாடியபடி ஒரு கலன் பெற்றோலை இதன்மீது ஊற்றிக் கொள்ளி வைத்ததாம்!

இது ஒரு வெறும் சம்பவமா? அல்லது சற்றே விரிவுபடுத்தப்பட்ட சிறுகதையா? வாழ்வின் தடங்களும் இலக்கியம் தானே! இது இலக்கியம் இல்லையா?

ஐயோ....எத்தனை அமுதன்கள் கண்களில் சிம்மாசனக் கனவுகளோடு; யதார்த்தத்தில் உட்காரக் கல்லுத்துண்டு கூட இன்றி.... எல்லாம் வெறும் சம்பவங்கள் மட்டுந்தானா?

குண்டி கழுவிய கிடங்குத் தண்ணீரைக் குடித்து, தொற்று நோய்க் கிருமிகளிடமிருந்து தப்பிக்க எங்கள் உடல் கூர்ப்படைந்துவிட்டது என்று வீராப்பு பேசியதும், எலியைச் சுட்டுத் தின்று பிளேக் நோய் எமக்கு வராது என்று மார் தட்டியதும், சிரங்கு சொறிகளும், பேன்களும் உடல் முழுதும் பரவ சுதந்திரம் கொடுத்துவிட்டு மக்களின் சுதந்திரம் பற்றி விரிவுரைகள் கேட்டதும், கட்சியிலே உறுப்புரிமையில்லை, ஆனால் உட்கட்சிப் போராட்டம்என்று முனைந்ததும்,



(தொடர்ச்சி 26 ஆம் பக்கம்)

# வாசகர் கடிதங்கள்

பெண்கள் பற்றிய கட்டுரைகளில் மிகவும் முக்கியமானதும்,பலர் அறிய வேண்டியதுமான ஒரு கட்டுரையை கலம் 39இல் வெளியிட்டுள்ளீர்கள். தேசிய விடுதலைப் போராட்டத்தில் பெண்கள் என்ற அக் கட்டுரையை எழுதியிருந்த அஸ்வினிக்கு எனது வாழ்த்துகளும்,வரவேற்புகளும். உண்மையிலேயே பிரயோசனமான கட்டுரை.

..... — றஞ்சினி

தூண்டில் பற்றிய எனது மதிப்பீட்டிற்கு விமர்சனம் என்ற பெயரில் 'குழம்பவேண்டாம் குழப்ப வேண்டாம்' என்று தனது சூத்திரப் பார்வையை ஒப்புவித்த நண்பர் தன்னை இனங்காட்ட திராணியற்று செல்லக்கண்டு என ஒளிந்துகொண்டாலும் அவர் எவரென்பது எனக்கு முக்கியமில்லை. தூண்டிலைப் பலியாக்கும் ஆசாமியாக அவர் இருப்பது தாம் கவலையாய் உள்ளது. ஏனெனில் தூண்டில் வாசகர்களுக்கு அவர் தலைமை தாங்கி சமூக மாற்றத்திற்குரிய வெகுசனப் பத்திரிகையாகத் தூண்டிலை வர்க்க உணர்வுள்ள வாசகர்கள் கருதவில்லையென்று தன்னை மறந்து தனக்கு முழுத் தூண்டில் வாசகர்களையும் பற்றிய சகலதும் – தெரிந்தவர் போலவும், தூண்டில் வாசகர்களை மையப்படுத்தும் தலைமை போலவும் புலம்புவது மிகமிக கட்டுப் பேட்டித்தனமாகும்.

மேலும், வெகுசனப் பத்திரிகை பற்றிய அவர்கூறும் பார்வையானது சூத்திரவடிவில் குறுகிவிட்ட சித்தாந்த விளக்கமாகும். இப்படியாக ஒப்புவிப்பவர்களையே வாய்ப்பாட்டுமுறை கருத்தியலாளர்கள் என்றேன். மீண்டும் இப்படியானவர்கள் அம்பலமாவது அவர்களது நிலைமைகளைத் தெள்ளத் தெளிவாக்கிவிடுகிறது.

கட்சிக்குள் முடங்கும் ஒரு பத்திரிகைதாம் வெகுசனப்பத்திரிகையென்று ஓதுவது புத்திசாலிதனமாக இருக்கமுடியாது. ஒரு கட்சியை அமைக்கக்கூடிய தகைமைகளை உருவாக்கி அதற்கூடாகத் தன்னை ஐக்கியப்படுத்த முனையும் பத்திரிகையைக்கூட நாம் வெகுசனப் பத்திரிகையாக–

வே கணிக்கவேண்டும். எவ்வளவு தூரம் வெகுசனப் பத்திரிகை பற்றிய அறிதலை குறுக்கி விளங்கியுள்ளார்கள் என்பதற்கு செல்லக்கண்டுவே சாட்சி.

தூண்டிலில் இயக்கப்பாட்டின் வாயிலாக.. எனும்போது ஆதியில் தூண்டில் சமூக மாற்றத்திற்கான கருத்துகளுடன் வந்தது என்று கூறுவதில்லை. தூண்டில் கலங்களின் முன்னகர்வில், அதன் வளர்ச்சிப் போக்கில் அப்படி உருவாகியது என்பதையே கூறுவது. எதையும் ஆழமாகத் தாம் பார்ப்பதாக எண்ணுபவர்கள் பெரும்பாலும் சிந்தனையின் மேல்மட்டத்திலேயே கோபுரம் கட்டிவிடுகிறார்கள். இது கவலைக்குரிய விடயம்.

'குழம்பவேண்டாம், குழப்ப வேண்டாம்' என்ற பார்வைக்கு முக்கியத்துவம் தந்து அதற்குப் பதில் விளக்கம் தருவது எனது நோக்கமல்ல. ஏனெனில் தூண்டிலாளர்கள் தம்மைத் தாமே ஏமாற்றும் நிலைக்காளாகிவிட்டார்கள். அவர்கள் எதற்கும் முன்தட்டிய தீர்வையும், விளக்கங்களையும் பெற்றுவிட்டவர்கள். அவர்கள் வளர வாய்ப்பில்லை.

மார்க்ஸியத்தையும், லெனினியத்தையும் கம்பியூட்டராகப் பார்க்கும் நிலைக்கு ஆளாகிவிட்ட நபர்களின் சூத்திர விளக்கங்களுடன் ஒன்றிவிட்ட கடலோடிகள் மிகவும் சிரமப்பட்டே மார்க்ஸியம் ஒரு தத்துவம் என்று விளங்கிக்கொண்டு தமது அறிதலைப் புதிதாக்குவார்கள். அது வரையும் தூண்டில் பார்வைக்கு சரியானதாகவே தெரியும். அதன் காரண, காரிய பக்க விளைவுகள் சமூக இயக்கப்பாட்டிற்கு குறுக்கேயே நிற்கும். இவ்கையான என் கண்ணோட்டம் காழ்ப்புணர்ச்சியின் பிரதிபலிப்பல்ல. அப்படியெடுத்தாலும் எனக்குப் பிரச்சினையில்லை.

'திண்ணைத் தியானிகள்' தாம் இன்றைய விமர்சகர்களும் வாசகர்களும். ஐரோப்பாவில் உள்ள அனைவருக்கும் இது பொருந்தும். ஏன் இலங்கையிலுள்ள புத்திஜீவிகளுக்கும் இது பொருந்தும். திண்ணைத் தியானிகளுக்குள் என்னையும் இணைத்தே கூறுகிறேன். இத் தியானிகளிடம் குறையுள்ளதாலேயே இவர்கள் புரட்சிக்குரிய பக்குவநிலையை அடையாதவர்களாக இருக்கிறார்கள். எனவேதான் இவர்கள் திண்ணையிலிருந்து தியானிக்கிறார்கள். புரட்சிக்குரிய தன்மைகளையும், அதைச் சாத்தியப்படுத்த நாம் எப்படி எம்மைச் சமுதாய ஜீவிகளாக்க வேண்டும் என்பதை விளங்கிக்கொள்ளாத வரையும் நாம் திண்ணைத் தியானிகளே.

இறுதியாக, இருட்டடிப்பு எதுவென்று விளங்கிக் கொள்ள தூண்டிலின் செயல்களைப் பார்த்தாலே தெரியும். முதலில் மனிதராக மாறுங்கள். பின்பு யாவுமே விளங்கும்.

..... ப. வி. ஸ்ரீரங்கன்

தூண்டிலாளர்கள் தம்மைத் தாமே ஏமாற்றும் நிலைக்காளாகி விட்டார்கள் என்ற உங்கள் 'கணிப்பு'க்குரிய காரணங்களை முன்வைத்திருந்தால் பயனுள்ளதாயிருந்திருக்கும். நாம் செய்து கொள்ளும் காரியங்களால் சுயதிருப்தியடைவது எந்த மாற்றத்தையும் உண்டு பண்ணாது, இதைவிடுத்து இதற்கும் அப்பால் போகவேண்டும் என்றுதான் கலம் 40இல்கூட குறிப்பிட்டிருந்தோம். "இவர்கள் இப்படித்தான்" என்று முடிவுசெய்துகொண்டு, இதற்கு அப்பால் எதையும் ஆராயவிரும்பாமல் இந்த முடிவின் அடிப்படையில் வைத்து நோக்கும்போதே உங்களால் புரிந்துகொள்ள முடியாமல் போகிறது. முழு உண்மைக்கும் நாங்கள் சொந்தக்காரர்களாக முடியாது, பரந்துபட்ட, திறந்த கருத்துப் பரிமாறல்கள் மூலமே சரியானவைகளைச் சென்றடைய முடியும் என்று நாம் கருத்துத் தெரிவித்த பின்பும் நாங்கள் முன்தட்டிய தீர்வையும், விளக்கங்களையும் பெற்றுவிட்டோம் என்று நீங்கள் கூறுவதும்கூட மேற்சொன்ன அடிப்படையிலான உங்கள் நோக்கிலமைந்ததாகும்.

மார்க்ஸியத்தையும், லெனினியத்தையும் கொம்பியூட்டராகப் பார்க்கும் நிலைக்கு ஆளாகி விட்ட நபர்களின் சூத்திர விளக்கங்களுடன் ஒன்றிவிட்ட கடலோடிகள் என்ற 'உங்கள் கணிப்புக்குரிய' காரணங்களையும் முன்வைக்கவில்லை. நாங்கள் மார்க்ஸியம், லெனினியத்தை முழுதாகக் கற்கவில்லையாயினும் அவற்றை சமூக விஞ்ஞானமாகவே விளங்கிக் கொள்கின்றோம்.

தன்னை மறந்து, தனக்கு முழு தூண்டில் வாசகர்களையும் பற்றிய சகலதும் தெரிந்தவர் போலவும் தூண்டில் வாசகர்களை மையப்படுத்தும் தலைமை போலவும் செல்ல கண்டு புலம்புவது மிகமிகக் கட்டுப் பெட்டித்தனமாகும் என்று முதலில் குறிப்பிட்ட நீங்கள் இறுதியில் ஐரோப்பாவில் உள்ள அனைவரும், இலங்கையிலுள்ள புத்திஜீவிகளும் திண்ணைத் தியானிகள்தான் என்றுகூறுவது எந்தவகையானது என்பதை நீங்களே தெரிந்துகொள்ள முடியாதபடி நிதானத்தைக் கைவிட்டு, ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்ட ஒரு முடிவின் அடிப்படையிலிருந்து இக்கடிதத்தை எழுதியுள்ளீர்கள். இது 'சீச்சீ இந்தப் பழம் புளிக்கும்' என்ற பாணியிலேயே அமைந்துள்ளது. விமர்சகர்களையும், வாசகர்களையும் பற்றிய உங்கள் விளங்கலில் சூழ் நிலைகளைக் கணக்கிலெடுக்காத வெறும் வெறுப்பே வெளிப்பட்டுள்ளது.

இருட்டடிப்பு எதுவென்று தூண்டிலின் செயல்களைப் பார்த்தால் தெரியும் என்பதற்குரிய காரணங்களையும் காட்டவில்லை.

—கடலோடிகள்

---

சிறுகதை (தொடர்ச்சி)

அதனால் மண்ணில் புதைந்ததும், நம்பிக்கை வெடித்துச் சிதறிப் பைத்தியமானதும்.....

எத்தனைபேரின் வாழ்வை வெறும் சாம்பல்கள் விழுங்கி ஏப்பம் விட்டுவிட்டு தடங்கலுக்கு மனம் வருந்துகின்றன. மானிடம் எங்கே? எங்கே மானிடம்? சொல்லுங்கள். என்ன மௌனமா?

தொலைந்ததைத், தொலைத்ததைத் தேடுவோம் வாருங்களேன்.

வாருங்களேன்.

●

அருமை

# களனி 89

புகையிரதப் பாலத்தின் இரும்புக் கேடர்கள்
இளகி உருகும்வரை
அழுத்தும் அதிகாலைப் பனியிலும்
சூரியன் சுட்டு வெந்த தார்ச்சாலைகளில்
மானுடர் தவிக்கும் பகற் பொழுதுகளிலும்
கொங்கிறீற் பாலத்தில் நின்றபடி
சோடியம் விளக்குகள் இருளைக் கொறிக்கையிலும்
இரண்டாயிரம் வருட அரசியல் கண்ட
களனி கங்கை பாயும்
கம்பீரமாக நிதானமாக.

வேனிலில் மணல் சுமக்கும் ஓடங்கள்
மெல்ல மிதக்கையிலும்
மழைக்கால வெள்ளத்திற்
குடிசைகள் அமிழ்ந்து வாழைகள் விழுந்து
மானுடர் குளிரில் நடுங்குகையிலும்
களனி
கம்பீரமாக நிதானமாக.

மனித உடல்கள் நாள் தவறாது
மிதந்துவரும் இன்றைக் காலங்களிலும்
களனி
சந்திக்குச் சந்தி மோனத்தமர்ந்திருக்கும்
போதிசத்துவர் போல
கம்பீரமாக நிதானமாக.

1971 ஏப்ரல் கிளர்ச்சிக் காலத்தே
புராதன புத்தர் சிலை ஒன்றன் பீடத்தில்
கிளர்ச்சிக்கார வாலிபன் ஒருவன்
எழுதியதாகச் சொல்லப்பட்ட வசனம்:

"இரண்டாயிரம் வருஷம் அமர்ந்திருந்தது போதும்
இனியாயினும் எழும்!"

சேகர் *

# செய்திக் குறிப்பு

01.04.91 வீரகேசரி

அம்பாறை சியம்பலாண்டுவ பொலிஸ் பகுதியிலுள்ள றெவுகல, பக்மிட்டியாவ என்ற 2 கிராமங்களில் வயல்களில் வேலை செய்து கொண்டிருந்த 5 சிங்களக்கிராமவாசிகள் புலிகளினால் கொல்லப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் 100போராளிகள் இராணுவத்தினரால்கொல்லப்பட்டுள்ளனர்.

சீவல் தொழிலாளர்களிடமும் புலிகள் கப்பம் வாங்கிவருவதால் அவர்களது ஜீவனோபாயம் பாதிக்கப்பட்டுள்ளது. ஒரு மரத்தில் சேகரிக்கும் ஒவ்வொரு போத்தல் கள்ளுக்கும் 5ரூபாவீதம் புலிகளுக்கு கப்பம் கட்டவேண்டும். எந்த மரத்தில் கள்ளு சேகரிப்பது, எந்த மரத்தில் கருப்பநீர் சேகரிப்பது என்பதையும் புலிகளே தீர்மானிக்கிறார்கள். இவற்றைத் தட்டிக்கேட்க முனைந்த சீவல் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் பலர்காணாமற் போயுள்ளனர்.

02.04.91 வீரகேசரி

மட்டக்களப்பு இருதயபுரத்தில் அரசபடைகளினால் கைது செய்யப்பட்ட 12 தமிழர்கள் கூரிய ஆயுதங்களினால் கொடூரமாகத் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

03.04.91 வீரகேசரி

தமிழீழத்தின் பெருந்தலைவர்களாயிருந்த தந்தை செல்வா, அண்ணன் அமிர்தலிங்கம், எம். திருச்செல்வம், ஜீ. ஜீ. பொன்னம்பலம் ஆகியோர் இன்று எம்மத்தியில் இல்லை என்ற வேதனைநிலையில் வடக்கு-கிழக்கு மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர். தமிழ் மக்களின் சிரேஷ்ட தலைவர் என்றுகூறுமளவிற்கு இன்று தொண்டமான் மட்டுமே எம்முடன் வாழ்ந்து வருகிறார். அழிவின் விளிம்பிலிருக்கும் எம் மக்களைப் பாதுகாக்க தொண்டமானின் பங்களிப்பு இன்று மிகவும் அவசியமாகத் தேவைப்படுகிறது-புளொட்

நாம் இங்கு நட்சத்திர ஹோட்டல்களில் இருந்துகொண்டு நாட்டின் அரசியல் பிரச்சினைகளைப் பற்றி விசாரித்துக்கொண்டிருக்கிறோம். வடக்கு-கிழக்கில் மக்கள் சொல்லொணாத் துன்பங்களுடன் உயிரை இழந்து, உடைமைகளை இழந்து வாழ்வுக்கும், சாவுக்கும் மத்தியில்போராடிக் கொண்டிருக்கின்றனர். நாட்டின் ஒரு பகுதி நெருப்பில் எரிந்துகொண்டிருக்கிறது. நாங்கள் பிடில் வாசிப்பதா?-லிபரல் கட்சி மகாநாட்டில் யோகேந்திரா துரைசாமி

04.04.91 வீரகேசரி

மூதூர் பகுதியிலுள்ள சம்பூர்கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்த சிங்கள மீனவர்கள் மீது ஆயுதபாணிகள் தாக்கியதில் 9பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த வருடத்திற்கான இலங்கையரசினது பாதுகாப்புச்செலவு1,560 கோடி ரூபா.

சண்டை ஓய்ந்ததும் தமிழினத்தின் முக்கிய அவசியம் கருதி எனது பங்களிப்பைச் செய்ய நான் மகிழ்ச்சியுடன் தயாராயிருக்கிறேன்-தொண்டமான்

06.04.91 வீரகேசரி

காங்கேசன்துறை சீமெந்துத்தொழிற்சாலையில் கடமையாற்றிய 843 ஊழியர்களுக்கு வேலைநீக்க உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

நிவாரணங்கள் நிறுத்தப்பட்டதாலும் கூட்டுறவுக்கடைகள் மூடப்பட்டுள்ளதாலும் பட்டினி கிடக்கும் தம்பலகாமம் அகதிகள் இராணுவத்தினரினால் வேலை வாங்கப்பட்டு வருகின்றனர்.

மக்களின் அபிவிருத்திக்குச் செலவிட வேண்டிய பெருமளவு பணம் கடந்த 17 வருடங்களாக பாதுகாப்புக்கு செலவிடப்பட்டு விரயமாக்கப்பட்டு வருகிறது – பிரேமதாச

08.04.91 வீரகேசரி

புலிகள்–இராணுவம் மோதலில் ஒரு வாரத்தில் மட்டும் 400பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இலங்கை அரசாங்கம் எந்த ஒரு நிபந்தனையும் விதிக்காதவிட்டால் அதனுடன் பேச்சுவார்த்தை நடாத்த புலிகள் தயாராகவுள்ளனர். சமரசப் பேச்சுவார்த்தைகளுக்கே அல்லது சமாதானத்தீர்வுக்கோ நாம் எதிரானவர்கள் அல்ல– கிட்டு

வெளிநாட்டில் வேலைபெற்றுக்கொடுப்பதாகக் கூறி பல தனியார் ஏஜென்சிகள் மக்களிடமிருந்து பல இலட்ச ரூபாய்களை திரட்டிக்கொண்டு தலைமறைவாகி மக்களை ஏமாற்றிவருகின்றன. இவர்களை நம்பி வீடுகளையும், கடைகளையும் விற்றுப் பணத்தைக் கொடுத்தவர்கள் இப்போது அநாதைகளாக, கடன்காரர்களாக, ஒருவேளை சாப்பாட்டுக்குக்கூட வழியில்லாதவர்களாக வீதி வீதியாக அலைகின்றனர். சிலர்வேறு வழியில்லாமல் இத்தகைய ஏஜென்சிமார்களின் வீட்டில் அடிமைத்தொழில் செய்துவருகின்றனர்.

09.04.91 வீரகேசரி

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை உயர்த்த அரசாங்கம்முன் வரவேண்டும். அத்துடன் பண்டிகைக்கால முற்பணவிடயம், தொழிற்சங்கதுறையில் வெட்டுப்புள்ளிமுறை ஆகியவற்றில் நிரந்தரத் தீர்வுக்கு வழிவகுக்க அரசாங்கம் முன்வருமாயின் நடைபெறவுள்ள உள்ஞூராட்சி தேர்தலில் அரசாங்கத்தை ஆதரித்துத் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட தயார் – தோ.தொ.ச

இதுவரைகாலமும் தொழிற் சங்க வட்டத்திற்குள் இருந்த தமது பிரச்சினையைப் பார்த்த மலையக மக்களை அரசியல் ரீதியாகச் சிந்திக்க வைப்பதே எமது நோக்கமாகும் – ம.ம.மு

10.04.91 வீரகேசரி

இலங்கையரசுக்கும், புலிகளுக்குமிடையே சமரசம் செய்துவைக்க மலேசிய அரசங்க்ம் முயற்சிக்கிறது என்றும், இலங்கையரசுக்கும், தங்களுக்குமிடையேயான எந்தவொரு பேச்சுவார்த்தையிலும் இந்தியா சம்பந்தப்படவேண்டும் என்றும் புலிகள் தெளிவாகத் தெரியப்படுத்தியுள்ளார்கள்.

மலையக மக்கள் மற்றவர்களைப்–போன்று ஆயுதம் ஏந்தவில்லை. இருந்தும் இன்று அவர்கள் உரிமைகளுடன் வாழ்கின்றனர். இதனை ஏற்படுத்திக்கொடுத்த ஐ.தே.க. கட்சியை மறக்கக்கூடாது– தொண்டமான்

11.04.91 வீரகேசரி

பண்டிகைக்கால முற்பணம் வழங்குவதற்காக தோட்டத் தொழிலாளிகளின் சம்பளத்திலிருந்து மாதம் 75ரூபா வெட்டப்படும்முறை தொடர்ந்துகொண்டிருக்கிறது.

திருகோணமலையில் 25 மீனவர்கள் காணாமற் போயுள்ளனர்.

மண்டூர் சந்தைக்கருகே இனந்தெரியாதோரால் கொல்லப்பட்ட தலைகள் துண்டிக்கப்பட்டநிலையில் 3 ஆண்களின் சடலங்கள் கிடக்கக்காணப்பட்டன.

12.04.91 தாயகம்

தமிழீழம் வேண்டுமா? வேண்டாமா என்பதைக் கண்டறிவதற்கும், தமிழ் மக்களின் உண்மையான பிரதிநிதிகள் யார் என்று அறிவதற்கும் தமிழ்மக்கள் மத்தியில் சர்வஜனவாக்கெடுப்பு நடத்தப்படவேண்டுமென புலிகளின் லண்டன் தளபதி கிட்டு தெரிவித்துள்ளார்.

16.04.91 வீரகேசரி

அம்பாறை ஆயித்திய மலைப்பகுதியிலுள்ள சிங்களக் கிராமமொன்றைப் புலிகள் துப்பாக்கிகள், வாள் சகிதம் தாக்கியதில் 17 பொது மக்கள் வெட்டியும், சுட்டும் கொல்லப்பட்டுள்ளனர். 7 வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

திருகோணமலையில் 6 தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

மூதூர் கடற்பகுதியில் மீன்பிடிக்கச்–சென்ற முஸ்லீம்களின் 20 படகுகள் மீது புலிகள் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் 7 படகுகளும் 10 மீனவர்களும் காணாமற் போயுள்ளனர்.

17.04.91 வீரகேசரி

வடபகுதி மக்கள் தென் பகுதிக்குச் செல்வதற்குப் புலிகளால் 16நாட்களாக விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டதையடுத்து முதல்நாளே 400பேர் தாண்டிக்குளத்தை கடந்து வவுனியா வந்துள்ளனர்.

அக்கரைப்பற்று அளிக்கம்பை பகுதியில் விறகுக்குச் சென்ற மூவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இதற்கு முன்னர் கோளாவில் கிராமத்தில் குடும்பஸ்தர் ஒருவர் நள்ளிரவில் இனந்தெரியாதவர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

18.04.91 வீரகேசரி

இலங்கையரசுக்கும், புலிகளுக்குமிடையே ஏதாவது பேச்சு நடக்குமானல் இந்தியா போன்ற வலிமைமிக்க பெரிய நாடொன்றின் மத்தியஸ்துடனேயே நடைபெறவேண்டும்- கிட்டு

இந்திய அமைதிப்படையுடன் ஏற்பட்ட மோதல்கள் ஆழ்ந்த வருத்தத்திற்குரியவை. நாங்கள் இந்தியாவின் பக்கமே இருக்க விரும்புகிறோம். இந்தியாவின் நலனுக்கெதிராக நாம் என்றும் செயற்பட்டதில்லை. புலிகளுக்கும் இந்திய அமைதிப்படைக்குமெதிரான மோதல்கள் எமது வரலாற்றில் மிகவும் துரதிஸ்டவசமானது. இரு தரப்பினரும் முற்றாக அதனை ஒரு கெட்டகனவாக மறந்துவிடவேண்டும். நாங்கள் எப்போதும் டெல்லியுடன் தொடர்புகொண்டே வந்திருக்கிறோம். எதிர்காலத்திலும் டெல்லியுடன் எமது தொடர்புகளை வைத்திருக்கவே விரும்புகிறோம் - புலிகளின் பேச்சாளர் காசி ஆனந்தன்

புத்தளத்திலுள்ள அகதிமுகாம்களில் தங்கியுள்ள 27மன்னார் அகதிகளும் 5 தினங்களுக்குள் முகாம்களிலிருந்து வெளியேறி சொந்த இடங்களுக்குச் சென்றுவிடவேண்டும் என்று இராணுவம் மிரட்டியுள்ளது.

சிங்கப்பூரில் அதரா பண்டாரநாயக்கவும், தமிழ் முக்கியஸ்தர்களும் - பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

நாம் நிறுத்தியுள்ள வேட்பாளர்கள் சரியோ, பிழையோ அனைவரும் இ.தொ.கா.வின் வெற்றிக்காக வாக்களிக்கவேண்டும்-தொண்டமான்

அரசுக்கு எதிரான சக்திகளுக்கு ஆதரவு வழங்கும் அரச ஊழியர்களுக்கு கருணை காட்டவேண்டாம். அரசுக்கெதிரான சக்திகளுக்கு உடந்தையாக இருப்பவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். - வன்னி மாவட்ட எம்.பி குகனேஸ்வரன்

19.04.91 வீரகேசரி

வாழைச்சேனைப் பகுதி இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு42 பேர் கைதுசெய்யப்பட்டு இராணுவமுகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் பின்னர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

75ஆவது பிறந்ததினத்தைக் கொண்டாடிய எதிர்க்கட்சித்தலைவி சிறிமாவுக்கு நீலநிற சாறியொன்றை அன்பளித்து தமிழ் காங்கிரஸ் உபதலைவர் வாழ்த்து தெரிவித்துக் - கொண்டார்.

புலிகளின் குரல் வானொலிச்சேவையில் பல்கலைக்கழகங்களை இனித் தாங்களே நடத்தவேண்டிய நேரம் வந்துள்ளதாகவும், கல்வி முறையிலும் மாற்றங்கள் செய்யவேண்டியிருப்பதகவும் யோகி அறிவித்துள்ளார். பிரபாகரனின் வரலாறு தொடர்பாகவும், புலிகளின் போராட்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் மாணவ மாணவிகளுக்குப் போதிக்க வேண்டும் என்று ஆசிரியர்கள் வற்புறுத்தபடுகின்றனர்.

19.04.91 தாயகம்

தாண்டிக்குளம் பகுதியில் தாங்கள் தடுத்து வைத்திருந்த 2,500பொதுமக்களையும் புலிகள் தங்கள்தடைமுகாம்களைத் தாண்டிச்செல்ல அனுமதித்துள்ளனர். வடக்கு நோக்கியும் வடக்கிலிருந்தும் சென்ற தமிழர்களை தங்கள் தடைமுகாமைத் தாண்டிச்செல்ல 2ஆயிரம் ரூபா அல்லது இதற்குப் பெறுமதியான தங்கம் தரும்படி புலிகள் தடுத்து வைத்திருந்தனர். இத் தடைமுகாமிலிருந்து தப்பியோட முயன்ற இருவர்மீது புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். தங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டதால் ஒருபெண் தற்கொலை செய்துகொண்டார்.

காரைநகரில் நடந்த தாக்குதலில் 500க்கும் மேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

20.04.91 வீரகேசரி

வன்முறையைக் கைவிடுவதாகப் பிரகடனம் செய்த பிரச்சினையைப் – பேசித் தீர்க்கலாம் வாருங்கள். தேவையானவாறு விட்டுக்கொடுக்கவும், சமரச இணக்கங்களுக்கு வரவும் நாங்கள் எப்போதும் தயாராக இருக்கிறோம் என்று பிரேமதாச புலிகளுக்குப் பகிரங்க அழைப்பு விட்டுள்ளார்.

யூகொஸ்லாவியாவிலிருந்து இத்தாலிக்குக் கால்நடையாக நடந்துவந்த 51 இலங்கையர்களில் 3 குழந்தைகள் கடும் குளிரினால் பாதிக்கப்பட்டு இறந்துவிட்டன. ஏனையோரைப் பொலிசார் பிடித்துக்கொண்டனர்.

22.04.91 வீரகேசரி

மொனராகல மாவட்டத்திலுள்ள நியத்தல என்ற கிராமத்தில் 21 சிங்களக் கிராமவாசிகள் தமிழ்க்குழுவினால் சுட்டும், வெட்டியும் கொல்லப்பட்டுள்ளனர்.

மன்னார், முருங்கன் பகுதியில் 34 போராளிகள் ஆயுதப்படையினால் கொல்லப்பட்டுள்ளனர்.

கல்முனையிலிருந்து கொழும்பு வரும் தமிழ்ப் பணயிகள் அம்பாறை 17ம் கட்டையிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அருகில் வைத்து மர்மமான முறையில் கடத்தப்பட்டு வருகின்றனர். இராணுவ உடையில் ஆயுதபாணிகளாக வருவோரே இதைச் செய்கின்றனர்.

தாண்டிக்குளம் இராணுவ முகாம் பகுதியில் வைத்து தமிழர்கள் சுட்டு கொல்லப்பட்டுள்ளனர்.

வடக்கு–கிழக்கு இணைந்த மகாண–அமைப்பின் கீழ் இரண்டு இனரீதியில் அமைப்புகளை ஏற்படுத்துவதென்ற தமிழ்க் கட்சிகளின் யோசனையை முஸ்லீம் கட்சிகள் நிராகரித்துள்ளன வடக்கு–கிழக்கு மாகாண அமைப்பின் கீழ் செயற்படத் தாம் விரும்பவில்லையென்றும், இரு இன ரீதியிலான அமைப்புகளிற்கான அதிகாரங்கள் மத்திய அரசிடமிருந்து நேரடியாகக் கிடைப்பதையே தாம் விரும்புவதாகவும் இவை தெரிவித்துள்ளன.

23.04.91 வீரகேசரி

பலாலி, குரும்பசிட்டிப் பகுதியில் இராணுவத்தினரால் 3பேர்கொல்லப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்திலுள்ள மாந்தை, நானாட்டான் ஆகிய இடங்களில் புதிய இராணுவமுகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

24.04.91 வீரகேசரி

மொனராகலை பகுதியிலுள்ள லயன்களுக்கு வந்த காடையர்கள் அங்கிருந்த தொழிலாளர்களைத் தாக்கியதுடன் லயன்களுக்கும் தீ வைத்துள்ளனர். 6பேர் வெட்டுக் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும் 35பேர் காயமடைந்துள்ளனர்.

உள்ளூராட்சித் தேர்தல் நெருங்கிக்கொண்டிருக்கையில் துப்பாக்கி ஏந்திய மர்ம மனிதர்களின் நடமாட்டமும் அதிகரித்துள்ளது.

வானொலியில் காலை முதல்மாலை வரை அரசாங்கத்தின் பல்லவிதான் தொலைக்காட்சியில் மாலை முதல் நள்ளிரவுவரை அரசாங்கத்தைப் பற்றிய புராணம்தான். இந்தளவுக்கு தொலைதொடர்புச் சாதனங்களை அரசாங்கத்துக்கு ஆதரவாகப் பயன்படுத்தும் நிலைமை உலகில் எந்த நாட்டிலுமே இல்லை.

பூஸா தடுப்பு முகாமிலிருந்து விடுவிக்கப்படுபவர்கள் எரித்துக் கொல்லப்படுகின்றனர்.

26.04.91 தாயகம்

திருகோணமலை கிளப்பன் பேர்க் அகதிமுகாமில் உள்ள பெண்கள்மீது இராணுவம் பாலியற் பலாத்காரம் புரிந்துள்ளது.

கட்டைப் பறிச்சானில் சிங்களஊர்க் காவற்படையினர் 16 தமிழ் மக்களைக் கொன்றுள்ளனர்.

புலிகளின் வானொலியில் நடாத்தப்படும் சிறுவர் நிகழ்ச்சியில் பிரபாகரனின் புகழ் பாடுதலும், தலைவரால் சகல பிரச்சினைகளும் தீர்க்கப்படும் என்ற பாணியில் கதைகளும், குட்டிக் கதைகளும் கூறப்பட்டு வருகின்றன.

தற்போது தாண்டிக்குளத்தில் அரசபடைகளுடன் இணைந்து புளொட்டினரும் புலிகளுடன் சண்டையிட்டு வருகின்றனர். அரசபடைகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதில்லை என்றும் தாங்களும், புலிகளுமே துப்பாக்கிப் பிரயோகம் செய்வதாகவும் புளொட் உறுப்பினர் கூறியுள்ளார்.

தாங்கள் செய்யும் சிறிய உதவிக ளுக்கு பிரதியுபகாரமாக புளொட் தங்களுக்கு அதிகம் செய்வதாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரி வித்துள்ளார். புளொட்டுக்கு ஆயுத் ங்கள் வழங்கும் அரசு தன் செலவி லேயே தங்கும் வசதிகளும் செய்து கொடுத்துள்ளது. புளொட் அலுவலக த்திலுள்ள தொலைபேசி வசதிகள் வவுனியா அரச அதிபருக்குக் கூட இல்லையென்பது குறிப்பிடத்தக்கது.

27.04.91 வீரகேசரி

காரைநகரிலுள்ள அரசபடையினரா ல் 26 தமிழர்கள் கொல்லப்பட்டு ள்ளனர்.

மட்டக்களப்பில் கடலுக்குச் சென்ற 4 தமிழ் மீனவர்கள் இன்னும் வீடு திரும்பவில்லை.

நாம் இனவாத அல்லது மொழிவா த அடிப்படையில் செயற்படவில்லை வடக்குக் கிழக்குப் பகுதிகளில் சிங் களவர்கள் குடியிருந்த பிரதேசங்க ள் தமிழ்ப் பிரதேசமாக மாறி வருகின்றது – அதுரா

இலங்கையரசுடன் பேச்சுவார்த்தை நடத்த நாம் தயாராகவுள்ளோம் ஆனால் இலங்கையரசு விதிக்கும் நிபந்தனைகளுடன் பேச நாம் த யாரில்லை. வன்முறையில் எமக்கு நம்பிக்கை இல்லை. ஆயுத பலத்திய ம் நம்பிக்கையில்லை. இந்தியா சம ரசம் செய்வதை நாம் வரவேற் கிறோம். இந்தியாவின் மத்தியஸ்தத் தின் மூலமே பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் – கிட்டு

28.04.91 வீரகேசரி

திருமலை சுந்தன்காடு பகுதியில் 11 தமிழர்கள் இராணுவத்தினரால் – கொல்லப்பட்டுள்ளனர்.

தொண்டர் ஸ்தாபன பிரதிநிதிகள் உரிய அனுமதிப்பத்திரங்களுடன் – கொண்டுசெல்லப்படும் உணவுப்பொ ருட்கள், மருந்துப் பொருட்களும் இ ராணுவத்தினரால் தடுத்து வைக்க ப்பட்டுள்ளன. அத்துடன் தொண்டர் ஸ்தாபன பிரதிநிதிகளும் தாக்கப்ப ட்டு வருகின்றனர்.

1985 காலப்பகுதியில் இராணுவ த்தினர் பயிற்சிகளுக்காக பிரிட்டன் அவுஸ்திரேலியா, இந்தியா, பாகிஸ் தான், அமெரிக்கா போன்ற நாடு களுக்கே அனுப்பப்பட்டனர் –இரா ணுவத் தளபதி



வானாவும், போனாவும்.

"அந்நாள் ஏன் தான் செய்த நல்ல வேலையையும் விட்டிட்டு இப்ப ஆக்களிட்டைக் கடன் வாங்கி சீவி யம் நடத்துறார்?"

"தினகரன்ரை இயேசு சீவிக்கிறாரிலை சேர்ந்திட்டா ராம்!"



–இன்னன்னா

# தூண்டிலின் பேச்சு அல்லது எங்களைப் பற்றி நாங்கள்

(கலம் 40இன் தொடர்ச்சி)

மூன்றாவது விமர்சனம்:

"தூண்டில்" ஒரு அரசியல் கட்சியின் வெகுஜனப் பத்திரிகையல்ல. ஆசிரியர் குழுவும் ஒரு கட்சியல்ல. கட்சியின் வெகுஜனப் பத்திரிகை கட்சிக்காக வெகுஜனத்தை அணி திரட்டுகிறது. கட்சியின் கொள்கைகளின் அடிப்படையில் பிரச்சினையை அணுகி தீர்வுகளை முன் வைக்கிறது. தான் வரித்துக் கொண்ட தத்துவ, சித்தாந்தங்களை முன் வைக்கிறது.

"தூண்டில்" இன்றுவரை கட்சியின் பத்திரிகையாகவில்லை. இந்தக் கலம் வரையான "தூண்டில்"இன் நிலையே ஆரம்பத்திலிருந்து பல மாற்றங்களுக்குட்பட்டே வந்திருக்கிறது. அந்தந்தக் காலகட்டங்களுக்கேற்ப கருத்து ரீதியிலான எமது மாற்றங்களை "தூண்டில்" தொடர்ந்து வெளிக்காட்டி வந்திருக்கிறது.

முதலாவது கலத்தின் அறிமுகத்தில் இன, மத, மொழிவேறுபாடின்றி இயங்கும் தென்னாசிய நிறுவன வழியில் (!!) வாசகர்களையும் வரும்படி அழைத்திருந்தோம் (?). இது பற்றி 9ஆவது இலக்கியச் சந்திப்பில் வாசகரொருவர் தெளிவாக விமர்சித்திருந்தார். இதைப் போலவே பழைய கலங்களின் சில விடயங்களைப் படிக்கும்போது இதை ஏன் எழுதினோம் என்றோ, இப்படி எழுதாமல் வேறு விதமாக எழுதியிருக்கலாமோ என்றும் நாம் நினைத்துப் பார்ப்பது உண்மையாகும். அன்று எமக்குச் சரியென்று பட்டதையே எழுதியிருக்கிறோம். அன்றைய நிலையில் நாம் தவறுகள் விட்டிருப்பின், அவற்றைத் தெரிந்து கொள்ளும் போது திருந்திக் கொள்கின்றோம்.

எதையும் செய்யாமலிருப்பவர்களால்தான் தவறு செய்ய முடியாமலிருக்கமுடியும். (எதையும் செய்யாமலிருப்பதே தவறு என்றும் ஒரு வாதம்!). எனவே எமது தவறுகளை மறைத்துக் கொள்ள நாம் விரும்பவில்லை. எதையும் கற்றுத் தேர்ந்த பின் தான் நாம் சஞ்சிகையை ஆரம்பித்தோம் என்றில்லை. (சஞ்சி

கையை ஆரம்பித்து இந்த 3 வருடகாலத்தில் என்ன கற்றீர்கள் என்றும் எமக்கு விமர்சனம் வைக்கப்பட்டுள்ளது.)

உயிர்ப் பாதுகாப்போடு சம்பந்தப்பட்டிருப்பதால் இலங்கையில் இலகுவாகச் செய்யமுடியாதிருக்கும் நேரடி விமர்சனங்கள், அம்பலப்படுத்தல்கள், எதிர்ப்புகள், வெளிப்படையான கருத்துப் பகிர்வுகள் என்பவற்றையே இலங்கையில் நசுக்கப்பட்டு, இந்நாடுகளில் ஓரளவுக்கேனும் இருக்கும் கருத்துச் சுதந்திரத்தைப் பயன்படுத்தி "தூண்டில்" பிரதானப்படுத்தி வருகிறது. எனினும் இது மட்டுமே முழுமையாகிவிடாதென்பதையும், இந்த ஒரு வட்டத்திற்குள் சுழலாமல் போராட்டத்துடன் இணைந்த நகர்வைத் தொடர்ச்சியாகத் "தூண்டில்" செய்ய வேண்டும் என்று வாசகர்கள் விரும்புவதையும் எங்களால் புரிந்துகொள்ள முடிகிறது. (எங்களின் விருப்பமும் இது தான்).

இந்த விருப்பங்களுக்கோ அமைப்பாகிக் கொள்வதற்கோ நாங்கள் எதிரானவர்கள் அல்லர். ஆசிரியர் குழுவின் எண்ணிக்கையே தேய்ந்துள்ளது தான் யதார்த்த நிலைமை. இதிலிருந்து-தான் நாம் செய்ய வேண்டியவைகளை ஆரம்பிக்க வேண்டியுள்ளது.

பொதுவான கருத்து என்பது அந்தக் கருத்துள்ளவர்களுக்கிடையில் புரிந்துணர்வைக்கொண்டுவந்துவிடப் போதுமானதல்ல. ஒரு பொது வேலைத் திட்டத்தில் ஈடுபடும்போதே உண்மையான புரிந்துணர்வு உருவாகும். தவிர, வெளிநாடுகளில் இருக்கும் உண்மையான நிலமை இன்று பலருக்கும் புரிந்துவருகிறது. இலங்கையில் நிலவும் பிரச்சினைகள் இங்கேயிருக்கும் இலங்கையர்க-ளை நேரடியாகப் பாதிக்காத நிலையில் அவர்களுடைய மனோநிலை இருக்கும் நிலைக்கேற்பவும் செயற்பட முடிகிறது.

அடுத்து, முக்கியமாக குறிப்பிடவேண்டியது என்னவெனில், ஒரு சஞ்சிகையைச் சஞ்சிகைக்குரிய தளத்தில் வைத்துப் பார்க்கப் பலர் தவறிவிடுவதாகும். இதனாலேயே ஒரு சஞ்சிகையை அதற்குரிய தளத்தைவிட்டு உயர்த்திப் பார்க்கும்போது "இது எவ்வளவோ செய்யப் போகிறது, இதனால் எவ்வளவோ செய்யமுடியும்" என்ற அதீத நம்பிக்கையும், சஞ்சிகைக்குரிய தளத்தைவிட்டு கீழிறக்கிப் பார்க்கும்போது "இதனால் ஆகப்போவது எதுவுமில்லை" என்ற அலட்சியமும் ஏற்பட்டுவிடுகிறது. தமது அபரிமித நம்பிக்கைகள் பொய்க்கும்போது வாசகர் ஏமாற்றமடைகிறார். புறக்கணிக்கும்போது ஒதுங்கிவிடுகிறார் அல்லது விரக்தியடைகிறார். இவையிரண்டுமே தவிர்க்கப்படவேண்டும்.

மூன்றாவது விமர்சனத்தின்படி போராட்டத்திற்கான சரியான திசைவழியையும், வெளிநாட்டுக்குரிய வேலைத் திட்டத்தையும் நாம் முன்வைக்காவிட்டாலு

ம் (இதுவரை முடியவில்லையென்றாலும்) இவ் வழிகளைக் கண்டறிவதற்கான திறந்த விவாதங்களை நடத்தி வருகிறோம். இலங்கையில் இருப்பவர்களும், வெளிநாடுகளில் இருப்பவர்களும் பரஸ்பரம் தங்கள் கருத்துகளைப் பகிர்ந்துகொள்ளும் ஊடகமாக இது தொடர்கிறது.

100 பூக்கள் பகுதியிலும், தேசத்தின் குறிப்புகள், வாசகர் கடிதங்கள் பகுதியிலும் சுதந்திரமான கருத்துப் பரிமாறல்கள் நடந்துகொண்டிருக்கும் — அதேநேரம் 'நமது விமர்சனத்தை' தனி ஆக்கங்களாக்கி நாங்களும் இந்த விவாதங்களில் பங்குபற்றுவோம்.

எதையும் முடித்துக்கொள்ளாமல் தொடர்ந்த விமர்சனத்திற்கு உட்படுத்துங்கள். கருத்துகளைப் பரிமாறிக்கொள்வோம். விமர்சனம்–சுயவிமர்சனம், திறந்த விவாதங்களின் ஊடாக உங்களுடையதும், எங்களுடையதுமான செயற்பாடுகள் சரியான இலக்கைச் சென்றடைய வழி செய்வோம்.

— கடலோடிகள்

---

# விமர்சனம்

நான்:

நகங்கள் பதிய
அடுத்தவன் முதுகு சொறிந்து
சொடுக்கிய விரல்களின்
சுகத்தில்
என் முதுகே
எனக்கு
மறந்துபோனது.

நீ:

பக்கத்து வீட்டுப் பிள்ளை
காசு விழுங்கியதால்
பெற்றோரின்
கவனக்குறை பற்றி
பேசிக் கொண்டிருந்தவனின் வீட்டில்
பிள்ளை
கடப்பாறை விழுங்கிச்
சாவு நடந்தது.

● சிவம்

தவிரவும் ஒரு குறிப்பிட்ட சிந்தனைப்போக்கு உருவாக அக் குறிப்பிட்ட வர்க்கம் அங்கே யதார்த்தத்தில் இருக்க வேணும் என்பது நியதியல்ல. மார்க்ஸியம்தான் முதன்முதலாக அரசியலை ஒரு விஞ்ஞானமெனப் போதித்தது. அரசியலை விஞ்ஞானமாகப் புரிந்துகொண்டுள்ள பாட்டாளிவர்க்கச் சிந்தனையாளர்கள் இருப்பதற்குப் பாட்டாளிவர்க்கம் அங்கு யதார்த்தத்தில் இருக்கவேணும் என்றுசொல்லமுடியாது. எங்கடை நாட்டிலை குறிப்பாக வடக்கு , கிழக்கிலை தேசிய முதலாளிகள் இருக்கிறார்களோ இல்லையோ பாட்டாளிவர்க்கம் என்று மார்க்ஸிய நூல்களில் தெரிவிக்கப்படும் வர்க்கம் இல்லை என்றே அடித்துச் சொல்லிவிடலாம். ஆனால் அதற்காகப் பாட்டாளிவர்க்கச் சிந்தனை அடிப்படையிலான அரசியல் இல்லை எனவோ, தேவையில்லை எனவோ ஆகிவிடுமா ? அப்படித்தான் தேசிய முதலாளிகள் பற்றிய 'சமரின்' பிரச்சினையும்! இங்கு தேசிய முதலாளிகளா, தரகு முதலாளிகளா இருக்கிறார்கள் என்று ஆராய்வது ஒரு விடயம். இன்னொன்று புலிகளிடம் ஆதிக்கத்தில் இருக்கும் சிந்தனை முதலாளித்துவ தேசியவாதத்தில் எவ்வகைப்பட்டதென்று ஆராய்வது. அது தரகு முதலாளிய வகைப்பட்டதா, தேசிய முதலாளிய வகைப்பட்டதா என்பது தீர்க்கப்படவேண்டிய பிரச்சினை. நான் இந்த இடத்தில் அவசரப்பட்டு தீர்வு சொல்ல விரும்பவில்லை. ஆனால் கூட்டணி போன்ற தரகுக் கட்சிகளுக்கும் புலிக்கும் அரசியல் ரீதியில் கோடுபோட்டுக் காட்ட முடியாதளவுக்கு ஊடுபாய்ந்திருக்கும் உடன்படு அம்சங்கள் இருப்பினும் வேறுபாடுகளும் இல்லாமலில்லை. இந்த வேறுபாடுகள்தான் இன்று வரை புலிகளை சரணடைவுக்கோ, ஆயுதங்களைக் கைவிடுவதையோ தடுக்கிறது; அரசியல் நீரோட்டத்தையிட்டு அவநம்பிக்கையுடன் அணுக வைக்கிறது. ஆயினும் இது அதுவாக முடியாது, மாறமாட்டாது என்று அடித்துச் சொல்லிவிட முடியாது. இவ்வளவுதான் நான் பேசினது. நீ எழுதினது. இதிலை என்ன உனக்கு விளங்கேல்லை" விறுவிறென்று பேசிவிட்டு நிறுத்தினார் நண்பர்.

"இப்ப கொஞ்சம் கூட விளங்கினது மாதிரி இருக்குது. உன்ரை அபிப்பிராயத்திலை புலியள் தரகுமுதலாளியவாதிகள் அல்ல என்பது கிளியர்தானே?"

"இன்னும் இல்லை. அதாவது இன்றைவரை அவர்கள் அந்தப் பிடிக்குப் போகவில்லை . நாளை போகக்கூடும். எமது பிரச்சினை நிலைமையை மதிப்பிடுவதுதான். அவர்களைப் பற்றி ஆரூடம் சொல்வதல்லவே.."

"நிலைமையை நீ மதிப்பிடு; ஆரூடம் சொல்லப் போகாதை.. அவங்கள் எப்பிடிப் போகிறாங்கள் என்பது உன்ரை பிர

ச்சினை இல்லை என்று சொல்வு. ஆனால் அதுதான் மற்ற முழுச் சனத்தின்ரையும் பிரச்சினையாக இருக்குது" என்றேன் நான் எரிச்சலுடன்.

"அது உண்மை. மற்றவர்களுக்கு அது பிரச்சினை. தாம் என்ன செய்யவேணும் எண்டு தீர்மானிக்கிறதுக்கு அவங்களையும், அவங்கடை போக்கையும் கணிக்கிறது, எதிர்வு கூறுறது எல்லாம் அவசியம்தான். ஆனால் அப்படிச் செய்யத் திறந்த, புறவயமான ஆய்வுதேவை. இங்கே நடப்பதெல்லாம் அகவயமான முடிவுகளின் அடிப்படையில் திட்டமிடுதலே. அதனால்தான் அப்படிச் சொன்னேன். முதலில் தாம் செய்யப் போவது என்ன என்பதைத் தெளிவாக்கிக்கொண்டால் பிறகுஅதை எப்படிச் செய்வது என்பதில் வருகிற இப்படியான பிரச்சினையை ஆராயலாம். ஆனால் இங்கை நடக்கிறது தாம் செய்ய வேண்டியதே புலியளை அழிப்பது என்பதுதான்... அது தானே பிரச்சினை" என்று பதிலுக்குச் சீறினார் நண்பர்.

கொஞ்சநேரம் நான் பேசாமலிருந்துவிட்டு திரும்பவும் அவரிடம் கேட்டேன்: "தேசிய முதலாளிகள் இல்லாமலே முதலாளிய தேசியவாதம் வரலாம் எண்டா சொல்லுறாய்..?" எனக்கு இது இன்னமும் தெளிவாகாதது போலிருந்தது.

"ஓம்.. இன்றைய காலகட்டத்தின் தன்மை அது. பெருமளவில் படித்த மத்தியதர வர்க்கத்திடமிருந்தே எமது நாட்டில் அரசியல் சிந்தனைகள் ஊற்றெடுக்கின்றன. ஆசிரியர்கள், மாணவர்கள், படித்த அரச உத்தியோகத்தர்கள் ஆகியோர் அறிவாளிகளாக இருப்பதாலும், நாடு பிரச்சினைக்குள்ளாகியிருப்பதாலும் நிறைய விடயங்களைத் தேடுகிறார்கள்; தேடித் தேடிப் பொறுக்குகிறார்கள். அவர்களிடம் — ஒரு சிந்தனை தொற்றிக்கொள்ள அனைத்து உலகங்களிலும் நடக்கின்ற பல்வேறு சம்பவங்களும் பங்காற்றுகின்றன. வங்கப் பிரிவினை எமது போராட்டத்துக்கு ஒரு புதிய உந்துதலைக் கொடுக்கவில்லையா அதைப் போல. எனவே சிந்தனைகள், போராட்டவழிமுறைகள் என்பனவற்றை உள்நாட்டிலுள்ள ஒரு குறிப்பிட்ட வர்க்கம் தனது சொந்த அனுபவத்துக்கூடாகத்தான் கற்றுக்-கொள்ள வேணும் என்பதில்லை. பிறர் அனுபவங்களிலிருந்தும் கற்றுக் கொள்கிறது. இதுதான் எமது நிலைமையும். சிந்தனையின் அரசியலம்சத்தை ஆராய்ந்து வர்க்க இயல்புகளைக் குறிப்பிடுவது தான் நான் செய்தது. ஆனால் தேசிய முதலாளிகள் இல்லாத-தால் அச் சிந்தனையே கிடையாதென்று மற்றவர்கள் சொல்வது...." அவர் தொடர்ந்தும் ஏதோ சொல்ல வாயெடுத்தார். எனக்கு விளங்கிவிட்டதுபோலப்பட்டது. எனவே அவரைத் தடுத்து நிறுத்தினேன்.

பேசிக்கொண்டிருக்கும் — போதே திடீரெனத் தோன்றி

வானாவும், போனாவும்.



"சண்டை ஓய்ஞ்சகும் தமிழினத்தின்ரை முக்கிய அவசியம் கருதி தன்ரை பங்களிப்பைச் செய்ய தொண்டமான் மகிழ்ச்சியுடன் இருக்கிறாராம்"

"கல்லறை கட்ட சீமேந்த வேண்டி வைச்சிருக்கிறாராக்கும்"

இன்னன்னா

யதைக் கேட்காவிட்டால் பிறகு மறந்துவிடுகிற ஒரு சிக்கல் எனக்கு நெடுக உண்டு. நான் கையுர்த்தியதைப் பார்த்துப் பேச்சை நிறுத்தி "என்ன?" என்று கேட்டார் நண்பர்.

"நீ தொடங்கும்போதே சொன்னாய் 'மனிதம்' குறுந்தேசியவாதம் எண்டு சொல்லுது எண்டு. அதுபற்றியும் கொஞ்சம் சொல்லு. அப்பதான் உன்ரை கருத்தைச் சரியா வைச்சு யோசிக்க முடியும்" என்றேன் நான்.

"அதுசரி. நானும் சொல்லத்தான் இருந்தேன். அதுக்கு முதலே நீ கேட்டிட்டாய். முதலில் இந்தக் குறுந்தேசியவாதம் எண்ட சொல்லு ஒரு காலங்கடந்த சொற்பிரயோகம் எண்டது என்ரை அபிப்பிராயம் எண்டதை சொல்ல வேணும். ஏனெண்டால் இந்தச் சொல்லுத்தான் காலங்காலமாக பாரம்பரிய இடதுசாரிகளால் தமிழ்த் தேசியவாத எழுச்சியை நிராகரிப்பதற்கு பயன்பட்டுவந்த சொல்லாகும். பாரம்பரிய இடதுசாரிகளின் இந்தக் 'குறுந்தேசிய வாதம்' தமிழ் மக்களது தேசியக்கோரிக்கைகளை நிராகரிக்கவும், சிங்களப் பேரினவாதம் நிறுவனமயப்படுவதற்கும் உதவிய ஒருசொற்றொடராகும். 'மனிதம்' இன் கருத்தில் பிற்போக்குத் தமிழ் முதலாளியக் கட்சிகள் குறுகிய நலன்களுக்காகப் பேசிய 'தேசியவாதம்' ஆகும். அவர்கள் பேசிய 'இனவாதம்' ஆகும். இந்தச் சொல் சிங்களப் பேரின வாத எழுச்சிக்குத் துணைநின்று அதனுடன் சமரசம் செய்து கொள்வதற்காக தமிழ் மக்களது உரிமைகள் மீது இடதுசாரிகள் குத்திய துரோக முத்திரையாகும். இந்த முத்திரையானது பாரம்பரிய இடதுசாரிகளை எந்தவிதத்திலும் 'புரட்சிகர'மாக்கிவிடவில்லை. மாறாக தமிழின எதிர்

ப்புக்கு உரமாக்கியது. எனவே இந்தச் சொல்லினால் இன்னும் எமது பிரச்சினையை விளக்கமுடியல்வது முழுமையானதாக இராது. குறுந்தேசியவாதம் என்பது (Narrow Nationalism) என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டிருப்பின் அதற்குள் இருக்கக்கூடிய சரியான அம்சத்தை இடதுசாரிகள் கணக்கிலெடுத்து வலுப்படுத்தி தமிழ்க் கட்சிகளின் இனவாத பிற்போக்குத்தன்மைகளை அம்பலப்படுத்தியிருக்கவேண்டும். ஆனால் அது செய்யப்படவேயில்லை! இன்டைக்கு நடப்பிலுள்ள நிலைமையோ முஸ்லீம்களை நாட்டைவிட்டு விரட்டுகிற, அழிக்கிற நிலைக்கு 'வளர்ந்து' இருக்கிறது. அந்த அர்த்தத்தில் அது தமிழ்ப்பேரினவாதமாக இருக்கிறதே ஒழிய குறுகிய தேசியவாதமாக இல்லை. குறுகிய தமிழ் நலனைக் கொண்டிருப்பது காரணமாக இதையும் குறுந்தேசியவாதத்தின் ஒரு அம்சம் என்று சொல்லலாமென்றால் இந்தக் குறுந்தேசியவாதம் என்ற சொல்ல எந்த அரசியல் அர்த்தமுமற்ற வெறும் சொல்லாகிவிடுகிறது. மற்றப்படி தனிநாடு அவசியம்தானா?, ஈழமில்லாமலே பிரச்சினை தீர்க்கப்படலாமா? என்ற சந்தேகத்தில் உள்ளவர்களால் மட்டுமே பாவிக்கப்படும் சொல்லாகவும் இது இருக்கிறது. இது ஒரு வகையில் நமது தேசியவிடுதலைப் — போராட்டத்தை ஒரு விடுதலை போராட்டமாக அல்லாது ஒரு குறுகிய சனனாயகப் போராட்டமாகப் பாக்க வைக்கிறது. முன்னரே சொன்னபடி அரசியல் அர்த்தமில்லாத சொல் என்பதால் அரச அதிகாரம் பற்றிய குறிக்கோள் அற்ற போராட்டமாகப் பார்க்க வைக்கிறது. உண்மையில் 'குறுந்தேசியவாதம் புலிகளையோ, எமது போராட்டத்தையோ விளக்க முடியாதது மட்டுமல்ல அடுத்து என்ன செய்வது என்ற பிரச்சினையை ஆய்வதிலிருந்தும் தவிர்க்கிறது"

"உன்னுடைய முதலாளிய தேசியவாதம் மட்டும் அதைச் செய்கிறதாக்கும்" நான் நண்பரைச் சீண்டினேன்.

"நிச்சயமாக! அது புலிகளை விளக்குகிறது. எமது போராட்டத்தை விளக்குகிறது. நாம் தொடர்ந்து தெரிந்து கொள்ள வேண்டிய மூன்றாவது பாதையை சுட்டிக் காட்டுகிறது. அரசைக் குறித்து எமது நிலையையும், புலியைக் குறித்த எமது நிலையையும் நாம் போக எடுக்கவேண்டிய நிலையையும் புரிந்துகொள்ள அது உதவுகிறது. அரசு ஒருபுறமும் கூடவே அதன் அடிவருடிகளும் நிற்க மறுபுறம் ஒரு அரசை உருவாக்கும் (Forming a state) நிலையில் புலிகள் இருக்க நாம் மூன்றாவது ஒரு பாதையை—எமது மக்களின் விடிவுக்கான ஒரு பாதையைத் தெரிவு செய்யவேணும் என்டு தெரிவிக்குது. ஆனால் நீ சொல்லுற 'என்ரை முதலாளித்துவ தேசியவாதம்' அல்ல அது. இதை முதலாளிய தேசியவாதமே எனப் புரிய வைக்கிற சிந்தனை இருக்குதே அதுதான்!

அது எனக்கு மட்டும் சொந்தமானதோ என்னுடையதோ அல்ல. அதுதான் இன்று பரவலாக மக்களை நேசிக்கிறவர்களிடமும் எழுந்துவருகிற சிந்தனையாகும். ஆனால்...."

"ஆனால்....?"

"ஆனால் அது இன்னமும் தெளிவடையாத ஒரு பாதை. மூன்றாவதாக ஒன்று தேவை என்பது மட்டுமே எமக்குப் புரிகிறது. அப்பாதை நடும் பாதை என்றும் தெரிகிறது. ஆனால் அது இன்னமும் முழுவதுமாகத் தெளிவாகிவிடவில்லை. அதற்கான தேட்டந்தான் இப்போது நடக்கிற விவாதங்கள், 'சமர்' முன் வைத்திருக்கிற திட்டம், நீயும் நானும் நடத்தும் சண்டை எல்லாம்...."

"கேக்கச் சந்தோசமாக இருக்குது.. நீங்கள் ஒரு இயக்கம் தொடங்கப்போறியள் எண்டு புலியள் நினைக்கப் போறாங்கள். கவனம்...!" என்றேன் நான்.

"புலிகளின் விருப்பத்தாலோ, வேறு யாருடைய விருப்பத்தாலோ அல்ல இந்த மூன்றாவது பாதை உருவாதல் தீர்மானிக்கப்படப்போவது. அது ஒரு தவிர்க்க முடியாத நியதி. எங்கடை பிரச்சினையெல்லாம் உருவாகும் மூன்றாவது வழியாவது சரியாக உருவாவதற்காக கடந்த காலத்தின் எல்லாப்பிரச்சினைகளையும் அக்குவேறு ஆணிவேறாக அலசுவது, விவாதிப்பது"

நான் அவரது முகத்தைப் பார்த்துக்கொண்டேயிருந்தேன். அவரது நம்பிக்கையும், ஆர்வமும் என்னை மெய்சிலிர்க்க வைத்தன.

சரியோ, தவறோ மனந்திறந்து விவாதிப்பது பிரச்சினைகளைத் தீர்ப்பதில் எவ்வளவு முக்கியமானது. கடந்தகாலம் முழுவதும் துவக்குகள்தான் விவாதங்களை நடத்தின. முடிவு முழுத்தேசமும் முட்டுச் சந்தில் வந்து நின்றதுதான். இப்போது மேற்கிலிருந்து வரும் பத்திரிகைகளிலுள்ள வாய்ப்பு பிரச்சினைகளைத் திறந்து விவாதிக்க உதவுகிறது. இது மிகவும் அக்கறையுடன் பயன்படுத்தப்படவேண்டும். விவாதத்தையும், தமக்குப் பிடிக்காத கருத்துகளையும் பார்த்துச் சிலர் விசச் செடிகளை நட முயல்வதாக ஆத்திரப்படத்தான் செய்வார்கள். ஆனாலும் நாம் விவாதிக்கத்தான் வேண்டும். பொய்யான தெளிவற்ற ஐக்கியத்தை விடவும் தெளிவான முரண்பாடுகள் ஆரோக்கியமானவை...

நான் எனக்குள் இவ்வாறு யோசித்துக் கொண்டேன்.

●

தவறுக்கு வருந்துகிறோம்.

கலம் 40இல் 'தேசத்தின் குறிப்புகளில்' இறுதிப் பந்தியில் (பக்கம் 48)"..புலியளை தேசியமுதலாளித்துவ சக்திகள் என நண்பர்..."எனத் தொடரும் வரியிலுள்ள 'தேசிய முதலாளித்துவ சக்திகள்' என்ற பதம் தவறாக இடம்பெற்றுவிட்டது. அது 'முதலாளித்துவ தேசியவாத சக்திகள்' என்று இருந்திருக்கவேண்டும்.

— கடலோடிகள்

## மௌனங்களின்

எனதூர்ச் சிறுமி
கோட்டை மீட்பில்
செத்தே போனாளாம்.

எனதூர் ஒழுங்கை
நேற்றிலிருந்து
இவளின் இன்னொரு பெயரால்
வழக்கிற்கு வருகின்றது.

"நேற்றிலிருந்து
எங்களூர் ஒழுங்கையில்
இவள் வாழ்கிறாள்
பெருமிதம் அண்ணா"
தங்கையின் அங்கலாய்ப்பு.

எனக்குள் மட்டும்.....?
விம்மி அழுதேன்
இறந்த உயிருக்காக.

உயிரின் இறப்பு
இறப்புத்தானே,
வாழ்ந்திருத்தல் அல்லவே.

புதிய மேய்ப்பர்களின்
வாழ்ந்திருத்தலுக்காக
யுகங்களாக
மனிதர்கள்
வாழ்வை இறத்தல்
தீபங்கள் ஏற்றி
மணியடித்து
உக்கி... நமத்து... சூனியமாகி...

எனதூர் ஒழுங்கை
ஆழமாகவே கிளறப்பட்டது.

வீர அஞ்சலிகள் பொறிக்கப்பட்ட
எலும்புகள்
குவியலாக...

வாழ்வின் அர்த்தங்கள்
அழிக்கப்பட்டேயிருந்தன.

எனது குழந்தையை
அவை எச்சரித்தன.

வாழ்ந்திருத்தல்
வீர அஞ்சலிகள் அல்ல.

வாழ்ந்திருத்தல்
மௌனங்கள் அல்ல.

எனது குழந்தை
பூமியை ஊடுருவி
உரத்துக் கத்தியது.
பூமியை
இன்னும் இன்னும்
ஆழமாகவே கிளறுவேன்.

• ராகவன் •

# வளைகுடாவில் இன்று!

குவைத்திலுள்ள எண்ணெய் வயல்களுக்காகவும், பணத்திற்காகவும், வளைகுடாப் பிரதேசத்தில் நாட்டாண்மை அதிகாரத்திற்காகவும் ஈராக்கும், அமெரிக்க கூட்டணிப்படைகளும் மோதியதில் ஈராக் தோல்வியடைய குவைத் அமெரிக்காவின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டதும் யுத்தம் முடிந்துவிட்டதாகவே பலரும் நினைத்துக்கொள்ளக்கூடும்.

ஈராக்கிலும், சவூதியிலும் நிலைகொண்டிருந்த சி. என். என் மற்றும் ஏனைய செய்தி நிறுவனங்கள் மரணங்களையும், அழிவுகளையும் கொம்பியூற்றர் விளையாட்டுகளாகக் காட்டி பணத்தை வாரிக்கொண்டு தங்கள் சாதனங்களை மூட்டை கட்டிக்கொண்டு புறப்பட்டுவிட்டார்கள்.

இப்போது செய்திகளில் ஓரளவுக்கு முக்கியத்துவப்படுத்தப்பட்டுள்ளது குர்திஸ் மக்களின் அவலமும், சதாமின் இராணுவ வெறியாட்டமும். இதுவும் கூட முன்பு நடந்த ஈராக்- அமெரிக்க கூட்டணி யுத்தத்தைப் போலவே திரிக்கப்பட்டும், மறைக்கப்பட்டும், பூதாகரமாக்கப்பட்டும் தமது நிலைப்பாடுகளுக்கேற்ப ஏகாதிபத்திய நாடுகளால் பிரச்சாரப்படுத்தப்படுகின்றன.

குர்திஸ் மக்களின் பிரச்சினைக்கு முன் திட்டமிட்டு அமுக்கபட்டுள்ள சில விடயங்களைப் – பார்ப்போம்.

ஈராக் இராணுவம் துரத்தப்பட்டு, அமெரிக்க கண்காணிப்பின் கீழ் குவைத் அதிகாரம் தப்பியோடிய மன்னர் பிரதானிகளுக்கு கையளிக்கப்பட்ட பின் குவைத்திலுள்ள பலஸ்தீனியர்களுக்கெதிராகவும், ஈராக் சார்பாயிருந்தவர்களுக்கு எதிராகவும் கொடூரமான வன்முறைகள் குவைத் அரசினால் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன. சர்வதேச மன்னிப்புச் சங்கத்தின் அறிக்கையின்படி 4 ஆயிரத்திற்கு மேற்பட்ட பலஸ்தீனியர்கள் காணாமற்போயுள்ளனர். 500க்கு மேற்பட்டோர் மிருகத்தனமான சித்திரவதைகளுக்குள்ளாகியுள்ளனர். குவைத் அரசபடைகளினால் கைது

செய்யப்பட்ட பலர் தூக்கிலிடப்பட்டதாகவும் தெரிய வந்துள்ளது. குவைத் நாட்டுக்கு தங்கள் உடல் உழைப்பை வழங்கிய இலங்கை, பிலிப்பைன்ஸ் மற்றும் ஏனைய ஆசியநாட்டுப் பணிப்பெண்கள் குவைத் அரச படையினராலும், ஆயுதந்தாங்கிய குண்டர்களினாலும் மிருகத்தனமான பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டுள்ளார்கள். இதைப் பற்றி ஐ. நா. சபையோ, ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போர் தொடுத்த ஆக்கிரமிப்பு நாடுகளோ கண்டு கொள்ளவில்லை. எனவே செய்தி ஸ்தாபனங்களும் இவற்றைப்பற்றி அலட்டிக்கொள்ளாமலிருப்பதில் எந்த ஆச்சரியமுமில்லை!!

ஈராக் மீதான அமெரிக்கக் கூட்டணிநாடுகளின் தாக்குதல்களில் பொதுமக்கள் பெருமளவில் கொல்லப்பட்டது யுத்த காலத்திலேயே தெரிய வந்திருந்தது. விமானத் தாக்குதலிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் — கொள்ள பதுங்குகுழிகளுக்குள் ஒளிந்திருந்த மக்கள் கூட அமெரிக்க விமானப்படையினால் மூர்க்கமாகக் கொல்லப்பட்டுள்ளனர்.

வீடுகள், கடைகள் தரைமட்டமாக்கப்பட்ட நிலையிலும், அங்கவீனமடைந்த நிலையிலும், ஐ. நா. சபையின் தடைகளாலும், போரின் அனர்த்தங்களாலும் உருவான பஞ்சத்திலும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் ஈராக்கிய மக்களைப் பற்றி இன்று யாரும் கவனத்தில் எடுத்துக் கொள்ளக் காணோம். சதாமின்




முட்டாள்த்தனமான போரில் குடும்பத்தினரை, உறவினர்களையிழந்தநிலையில், பட்டினியுடன், சொந்தநாட்டின் இராணுவத்தினாலேயே அடக்கப்பட்டுக்கொண்டிருக்கும் ஈராக்கிய மக்களின் அவலம் உலகின் கண்களிலிருந்து திட்டமிட்டு மறைக்கப்பட்டுள்ளது.

தனது சொந்தநாட்டு மக்களையே ஏறிமிதித்து அதிகாரத்தை நிலைநாட்டிவரும் சதாம் தனக்கு எதிரான கூட்டணியை எதிர்க்க எந்த ஒரு தார்மீக பலமுமில்லாமல் படுதோல்வியடைந்ததை மறைத்துக் கொள்ள குர்திஸ் இன மக்களை அழிக்கும் நடவடிக்கையிலும், அவர்களை ஈராக்கிலிருந்து முற்றாகத் துரத்தியடிக்கும் நடவடிக்கையிலும் முழுமூச்சாக ஈடுபட்டுள்ளார். அமெரிக்கக் கூட்டணியை எதிர்க்க பயன்படுத்தப்படாத நேபாம் குண்டுகள், இரசாயனக் குண்டுகள் எல்லாம் நிராயுதபாணிகளான அப்பாவிக் குர்திஸ் மக்களை

நிர்மூலமாக்கப்பயன்படுத்தப்படுகின்றன.

உடுத்துவதற்குச் சரியான உடைகள் கூட இன்றி, கால்களில் சப்பாத்து, செருப்புகளுமில்லாமல், சாப்பிட உணவில்லாமல், குடிக்க நீர் இல்லாமல் குர்திஸ் மக்கள் சதாமின் கொலைவெறிக்கு அஞ்சி ஈராக்கைவிட்டு வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள். துரத்தும் ஈராக்கிய இராணுவத்திடமிருந்து தப்பி, உடலை உறைய வைக்கும் பனியிலும், கரடுமுரடான செங்குத்தான மலைகளில் ஏறி ஈராக் எல்லைகளை கடந்துகொண்டிருக்கிறார்கள். தப்பியோடும் பத்தாயிரக்கணக்கானவர்களில் மலைகளைக் கடக்கும் ஆபத்தான வழிகளில் பலர் இறக்கின்றார்கள். பசியினாலும், நோயினாலும், குளிரினாலும் தினமும் ஐம்பது, நூறு என்று கைக்குழந்தைகளிலிருந்து முதியவர்கள்வரை இறக்கின்றனர்.

ஆரம்பத்தில் துருக்கி — ஈராக் எல்லைக்கு குர்திஸ் மக்கள் வந்தாலும், பின்னர் பயங்கரச் சரிவுகளையுடைய மலைகளைக் கடந்து சிரியாவுக்கும் ஈரானுக்கும் இப்போது குர்திஸ் மக்கள் தப்பியோடிக்கொண்டிருக்கின்றனர்.

பனையால் விழுந்தவரை மாடேறி மிதிப்பதுபோல, உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு தப்பிவரும் குர்திஸ் அகதிகளை துருக்கிய இராணுவம் துருக்கி — ஈராக் எல்லையில் வைத்துச் சுட்டுக் கொல்கிறது. வெறும்கண் துடைப்புக்கு குறைந்த எண்ணிக்கையிலான அகதிகளை நாட்டுக்குள் வர அனுமதித்த துருக்கி அரசு பெரும்பாலான அகதிகளை எல்லைகளிலேயே தடுத்து நிறுத்திவருகிறது. இதைமீறி நாட்டுக்குள் வரமுனைபவர்களை இராணுவத்தை ஏவி விரட்டியும், கொன்றும் வருகிறது.

துருக்கியின் இந்த நடவடிக்கைகளை மூடிமறைத்து துருக்கிக்கு ஊடாகவே அகதிகளுக்கான உதவிகளை வழங்கி வரும் ஏகாதிபத்தியங்கள் தமக்கு விசுவாசமான துருக்கி அரசை ஒரு மனிதாபிமான அரசாக காட்ட முனைகின்றனர். ஆனால் உண்மை வேறுவிதமானது.

துருக்கியில் இருக்கும் குர்திஸ் சிறுபான்மையினம் நண்டகாலமாகவே ஒடுக்கப்பட்டு வருகிறது. இவர்களை ஒரு சிறுபான்மையினமாகவே அங்கீகரிக்காத துருக்கிய அரசு இன, மொழியடிப்படையில் எந்த ஒரு சிறு சலுகையும் வழங்கவில்லை. துருக்கிய பொதுசனத் தொடர்புச் சாதனங்களில் குர்திஸ் இனத்தைப் பற்றி எதுவுமே இடம் பெறக்கூடாது என்பது ஒரு உதாரணமாகும்.

குர்திஸ் மக்களின் விடுதலைக்கென்று புறப்பட்ட குர்திஸ்தான் கெரில்லா இயக்கமான பி.கே.கே.(P.K.K)யை — இது இலங்கையின் புலிகளின் செயற்பாடுகளையொத்த இயக்கம்— தடைசெய்த துருக்கியரசு

இந்த இயக்கத்திற்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் தினமும் குர்திஸ் மக்களைக் கொன்றும், சித்திரவதைசெய்தும் அழித்து வருகிறது. 1984லிலிருந்து இதுவரை 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குர்திஸ் மக்கள் துருக்கி அரசபடைகளினால் கொல்லப்பட்டுள்ளனர். 1990இல் மட்டும் ஆகக் குறைந்தது சுமார் 800பேர் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர். இன்னும் ஏராளமான குர்திஸ் மக்கள் துருக்கியின் சிறைக்கூடங்களில் அடைக்கப்பட்டுச் சித்திரவதை அனுபவித்துக்-கொண்டிருக்கிறார்கள்.

இக்கொடிய அடக்குமுறையைப் பற்றி வாயே திறக்காத ஐ. நா. சபையும், ஏகாதிபத்தியங்களும் தங்களுக்கு எதிராகப் போய்விட்ட சதாமை தனிமைப்படுத்துவதற்காகவே ஈராக்கிலிருந்து விரட்டப்படும் குர்திஸ் அகதிகள் மீது திடீர்ப்பாசம் பொழிகின்றன. 1988 இல் 5ஆயிரம் குர்திஸ் மக்களை ஈவிரக்கமின்றி நச்சுவாயு மூலம் சதாம் கொன்றொழித்தபோது எதுவும் அலட்டிக் கொள்ளாமல் ஆயுத விற்பனை நடத்திக்கொண்டிருந்தவர்கள் இப்போதுதான் குர்திஸ் இனத்தை அங்கீகரி !! அவர்களுடைய பிரச்சினையைத் தீர்த்துவை!!! என்று மனிதாபிமானிகளாக மாறி நாடகமாடுகிறார்கள். தங்கள் பாரம்பரிய பிரதேசங்களில்— தங்கள் தேசத்தில்— காலங்காலமாக வாழ்ந்துவந்த குர்திஸ் மக்களை இதே அமெரிக்கத் தலைமையிலான ஏகாதிபத்தியக் கூட்டணிதான் — 1923ஆம் ஆண்டில் துண்டாடி, துருக்கி, ஈராக், ஈரான், சிரியா நாடுகளுடன் குர்திஸ் மக்களை வலுக்கட்டாயமாக இணைத்து அவர்களின் நாட்டையே இல்லாமல் ஆக்கினார்கள். அந்த மக்களை ஒரு துண்டு சொந்த நிலம்கூட இல்லாத நாடோடிகளாக்கிய அதே ஓநாய்கள்தான் இன்று குர்திஸ் அகதிகள் பனியில் நனைகிறார்கள் என்று கண்ணீர் விடுகின்றன.

உலகில் எங்கெங்கு விடுதலைப் போராட்டங்கள் நடக்கின்றதோ அங்கெல்லாம் தங்கள் பாசிசக் கரங்களை நீட்டி நசுக்கும் இந்த ஏகாதிபத்தியங்கள் இப்போது தம்மைக் குர்திஸ் இனத்துக்குக் குரல் கொடுப்பவர்களாகக் காட்டிக்கொள்கின்றன.

"எங்களிடம் எண்ணெய் இல்லை. அதனாலேயே எங்களைப் பற்றி யாருக்கும் அக்கறையில்லை" என்று துருக்கி— ஈராக் எல்லையிலிருக்கும் அகதிகள் கூறுகிறார்கள். பற்றைகளும், கற்களும், கழிவுகளும் நிரம்பிய இடங்களில் கூடாரங்கள் அடிக்கப்பட்டு இவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள். – 30° சி' க்கும் கீழான குளிரில் மாற்றுடையில்லாமல் இந்த அகதிகள் விறைத்துப் போயிருக்கிறார்கள். தினமும் பல குழந்தைகளும், முதியவர்களும் மண்ணுக்குள் புதைக்கப்படுகிறார்கள். நிலத்தில் பரவியிருக்கு

ம் பனித்துகள்களே இவர்களுக்கு குடிநீராகவும், ஆகாரமாகவும் இருக்கிறது.

ஈராக்கிய இராணுவத்தின் நேபாம் குண்டுகளாலும், இரசாயனக் குண்டுகளாலும் பாதிக்கப்பட்டு உடம்பு முழுவதும் எரிகாயங்களுடன் இரத்தமும், சீழுமாக ஆயிரக்கணக்கான அகதிகள் மருத்துவ சிகிச்சைகளின்றி மரண வேதனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். தொற்றுநோய்கள் வேகமாகப் பரவி கொண்டிருக்கின்றன. " ஈராக்கில் குண்டுகளால் சாகிறோம் . இங்கே பட்டினியால் சாகிறோம்" என்று இந்த அகதிகள் கண்ணீர்விட்டழுகிறார்கள்.

துருக்கி– ஈராக் எல்லைப் பகுதியிலிருக்கும் இலட்சக்கணக்–கான அகதிகளுக்கு மேற்கு ஐரோப்பியநாடுகள் வழங்கும் சொற்ப உதவியையும் துருக்கி அரசு அபகரித்துக்கொள்கிறது. " அகதிகளுக்கு மருத்துவசிகிச்சை அளிக்க அரசு எம்மை அனுமதிக்க மறுக்கிறது" என்று அகதிக் கூடாரங்களுக்கு அண்மையிலிருக்கும் எல்லைக் கிராமங்களிலுள்ள துருக்கி மருத்துவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வளைகுடா யுத்ததில் தங்கள் ஆயுத உற்பத்திகளைப் பெருக்கிக் கோடி கோடியாகச் சம்பாதித்த ஏகாதிபத்தியங்கள் பின்னர் குவைத்தை புனரமைக்கு



ம் வேலையையும் தாங்களே பொறுப்பெடுத்துக்கொண்டு பணத்தைச் சுருட்டிக் கொண்டிருப்பதைப்போலவே இப்போது ஈரானிலிருக்கும் குர்திஸ் அகதிகளுக்கு உதவி என்ற போர்வையில் ஈரானுக்குள் ஊடுருவ முயற்சிக்கின்றன. தொடர்ச்சியான அகதிகளின் வருகையாலும், பொருளாதார நெருக்கடியினாலும் ஈரானும் இதற்கான சந்தர்ப்பத்தை வழங்கக்கூடிய நிலைமையே தென்படுகிறது.

தெற்கு ஈராக்கை ஆக்கிரமித்திருக்கும் அமெரிக்க கூட்டணிப்படைகள் அப் பிரதேசத்தை பாதுகாப்புப் பிரதேசமாக்கி, அகதிகளுக்கான கூடாரங்களையமைத்து வருகிறார்கள். இங்கு தங்கியிருக்கும் அகதிகளுக்கு குடிநீர், உணவை வழங்கிக்கொண்டே தமது வழமையான போதனைகளையும் மேற்கொண்டு வருகிறார்கள். அத்துடன் சதாமைப் பதவி கவிழ்ப்பதற்கான கிளர்ச்சியை மேற்கொள்ள ஆயுதங்களும் வழங்கிவருகிறார்கள்.

யுத்தம் நடக்கும் போது அகதிகளாகத் தப்பியோடுவதும் ஏனைய நாடுகளிடம் தஞ்சம் கேட்பதும் வரலாற்றில் தவிர்க்கமுடியாததாக இருந்துவருகிறது. ஆனால் இதைப்போல விடுதலை போராட்டத்திற்காகத் தஞ்சமடைய முடியாது.

ஓரளவுக்கு இதையொத்த கதைதான் நமது நாட்டில் நடந்தது. இலங்கை இனவெறி அரசினால் தமிழர்கள் அடக்குமுறைக்குள்ளானபோது அவர்கள் மீது அனுதாபப்படுவதாக நடித்துக் கொண்டே இந்திய அரசு தமிழ் இயக்கங்களுக்கு ஆயுதப் பயிற்சிகளும், ஆயுதங்களும், பணமும் வழங்கி அவற்றைத் தன்னுடைய கைப்பொம்மைகளாக்கிக்கொண்டது. தனது அரசியல் நோக்கங்களை இக் கைப்பொம்மைகள் மூலமே நிறைவேற்றும் முயற்சியில் தமிழர்களின் தேசிய விடுதலைப்போராட்டத்தைச் சீரழித்து, இன்று தமிழ் மக்களைக் குருதியில் மூழ்கடித்துள்ளது.

இதே நிலமை குர்திஸ்மக்களுக்கும் நேர்ந்துவிடக்கூடாது. சதாமும், இன்றைய ஈராக் எதிர்ப்புக் கூட்டணிகளும் நிரந்தரப் பகையாளிகளல்ல. தமது அதிகாரத்தை எந்தவழியிலாவது நிலைநிறுத்துவதற்கு முயற்சிக்கும் ஒரே வர்க்கத்தின் பிரதிநிதிகளே. இந்த நோக்கத்திற்காகவே இவர்கள் குர்திஸ் மக்களில் அக்கறையுள்ளவர்கள்போல நடித்துகொண்டிருக்கிறார்கள். நாளை சதாம் இவர்களுடன் சமரசம் செய்துகொண்டால் இதே குர்திஸ் மக்களுக்கு எதிராக தங்கள் ஆயுதங்களைத் திருப்பிவைத்துக்கொள்ள இவர்கள் தயங்கப்போவதில்லை.

எனவே பிரச்சினைக்குத் தீர்வு காணும் வழியில் அடக்குமுறையாளன் சதாமின் ஆட்சி சொந்த மக்களாலேயே தூக்கியெறியப்பட்டு மக்களிடம் அதிகாரம் கை மாறவேண்டும்.

(தொடர்ச்சி 57 ஆம் பக்கம்)

# விவாதம் எங்கே போகிறது?

ஆரம்பக் கலத்திலிருந்து 38ஆவது கலம்வரை தூண்டிலின் போக்கில் பல்வேறு வளர்சிப்போக்கினை அவதானிக்க முடிகிறது. எனினும் 34ஆம் கலத்திலிருந்து சற்றுப் புதிய பரிமாணத்தினைப் பெற்றுள்ளதை மறுக்க முடியாது.

இவ்வகையில் இலங்கையிலிருந்து சக ஓடிகளால் கலம்34 இல் ஆரம்பிக்கப்பட்ட விவாதம் பல்வேறு திசைகளிலிருந்தும் புதிய கருத்துகளை உருவாக்கியுள்ளது. ஆயினும் அக் கருத்துகள் யாவும் இன்றைய நிகழ்வுப் போக்கின் தேவைகளை, அத் தேவைகளின் அடிப்படையிலான நிர்மாணத்தினை நோக்கியதாகச் செல்கின்றதா என்பது கேள்விக் குறியாகவேயுள்ளது.

உண்மையில் சக ஓடிகளால் முன்வைக்கப்பட்ட விவாதமானது ஏற்கெனவே எம்மில் இறுகி போயுள்ள குறுகிய பார்வையினையும், குழுவாதப் போக்கினையும், ஒப்பீடுகளையும், அதன் தவறான போக்குகளையும் உடைத்து ஒரு மூன்றாவது கருத்து நிலையினை உருவாக்குவதும், அக் கருத்து நிலையினை எடுத்து, வளர்த்து அமைப்புருவாக்குவதையுமே நோக்கமாகக் கொண்டதென நான் கருதுகிறேன்.



மாறாக நாம் விரும்பியோ விரும்பாமலோ எம்மையறியாமல் கடந்தகாலப் பழக்கதோசங்களால் பட்டிமன்ற விவாதப்போக்கில் தேவையற்ற மாற்றுவழிகளை நோக்கி விவாதம் இழுபடுவதனை உணர முடிகிறது.

இன்று வெளிவருகின்ற சிற்றேடுகளில் நடாத்தப்படும் விவாதங்களை சகஓடிகளின் பாணியில் 3ஆக வகுக்க முனைகின்றேன்.

1. வித்துவக் காய்ச்சலின் அடிப்படையில் அமைந்த தத்துவவிசால விவாதங்கள்.
2. பக்கச் சார்பினை எடுத்தவர்கள் தாம் சார்ந்த நிலையினை நியாயப்படுத்துவதற்காக வாதத்துக்கு எதிர்வாதம் புரியும் விதண்டாவாதங்கள்.
3. பக்கச் சார்பின்றி உண்மையைத் தேடுவதற்காகவும், சரியான கருத்து நிலையினை உருவாக்குவதற்காகவும் எழுப்பப்படும் விவாதங்கள்.

இவற்றில் முதலாம் வகை

ப்பட்ட விவாதங்கள் தொடர்ந்தும் பல வித்துவச் செருக்குள்ளவர்களை உருவாக்கி வளர்ந்து வரும் தலைமுறையினரின் மண்டைகளை மசற வைப்பதாகும்.

இரண்டாம்வகை விவாதங்கள் பிழையான சக்திகளைத் தொடர்ந்தும் தவறான வழிகளில் நிலைப்படுத்துவதற்கும், அம்பலப்படும் அச் சக்திகளுக்கு முண்டுகொடுத்து, அவர்களின் அடாவடித்தனங்களுக்கு அங்கீகாரமளிப்பதற்கும் ஏதுவாகின்றது.

மூன்றாம் வகையின -
இன்று எமக்கு இன்றியமையாதவையாக விளங்குகின்றன. இவையே தேக்கத்திற்கு உள்ளாகியுள்ள விடுதலைப்பாதையின் தடைகளை அகற்றவும், திசை மாறிய, திசை தெரியாத சக்திகளைத் திசைப்படுத்தவும் உதவக்கூடியன.

மூன்றாம்வகை விவாதங்களின் அடிப்படையில் தோற்றம் பெற்ற மூன்று நிலைக் கருத்துப் போக்கு இன்று எம்முன் நிலவுகின்றன. இவை ஏற்கெனவே தூண்டிலின் ஆசிரியர் தலையங்கத்திலும், சகஓடிகளின் கருத்திலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

1. புலிகள்தான் இன்று தேசியசக்திகள். அவர்களின் கருத்து நிலைக்குப் பிரதியீடான இயக்கங்கள் வேறு ஏதும் இல்லை. இவர்களின் போராட்டமே இன்று நியாயமானது என்பதனை ஏற்றுக்கொள்ளும் போக்கு.

2. புலிகளை நிராகரித்து இந்திய, இலங்கை அரசுகளிடம் தம்மை தாரைவார்த்துக்கொடுத்துவிட்டு நிற்கும் இயக்கங்களை அங்கீகரிக்கும் போக்கு.

3. இவ்விரு சக்திகளையும் சரியாக இனம் கண்டு அவற்றின் வரலாற்றுத் துரோகத்தினைப் புரிந்துகொண்டு இவர்களை நிராகரிக்கும்போக்கு.

இவற்றின் அடிப்படையில் கலம் 34இலிருந்து கலம் 39 வரை நடத்தப்பட்ட விவாதங்களை நோக்கமுடியும்.

கலம் 35இல் சிவசேகரத்தினால் முன்வைக்கப்பட்ட 'விமர்சனமும், விடுதலைப் பாதையும்' பற்றிய தொடரில் பல உடன்பாடுகள் காணப்படினும், சமகாலச்சூழல், சமுதாய நிலைமைகள் பற்றிக் குறிப்பிட்ட கருத்துடன் எனக்கு உடன்பாடு கிடையாது. இதில் சமகாலச் சூழல் துணையாக இல்லாமையே ஒரு வலிய அரசியல் இயக்கம் உருவாகவில்லை என்பதற்கு கலம் 39இல் ந. மாணிக்கவாசகர் சரியான பதிலளித்துள்ளார். அது பற்றி நான் இங்கு குறிப்பிடத்தேவையில்லை.

இதேபோல் ஒரு சிற்றேடு தன்னை ஒரு புதிய அரசியற் போக்கின் முன்னோடியாக அமைக்கவோ அல்லது ஒரு விடுதலைப் போராட்ட அணியுடன் இணைத்துக்கொள்ளவோ முடியும். அதற்கான சமுதாய நிலைமைக

ள் உருவாகும்போது மட்டுமே இது சாத்தியம் ஆகும் எனக்குறிப்பிட்டுள்ளார். அவ்வாறாயின் இன்று எமது சமுதாய நிலைமைகள் என்ன? புதிய அரசியற் போக்கினை, மூன்றாவது கருத்துநிலையினை உருவாக்கும் தேவை இன்று எழவில்லையா? அதற்கான சூழல் இன்று உருவாகவில்லையா?

இன்று தேக்கத்திற்கு உள்ளான விடுதலைப் போராட்டத்தை, அதன் தடைகளைத் தகர்த்து தேடலின் வாயிலாக, பரந்தவிவாதத்தின் வாயிலாக உருவாகும் கருத்து நிலையினை அமைப்பாக்க முற்படுபவர்களை வெறுமனே தம்மை வலிந்து ஒரு அரசியல் சக்தியாக அமைக்க முற்படுபவர்கள் என முத்திரை குத்துவதும், அச்செயல்நிலை பாதகமான விளைவுகளை உருவாக்கும் என எதிர்வு கூறுவதும் எந்தளவிற்குப் பொருத்தமுடையதென சிவசேகரம் சிந்திக்க வேண்டும்.

கலம் 35இல் ராஜன்முருகவேல் `தூண்டில் என் நோக்கில்' என்ற தொடரில் தூண்டிலின் போக்கு தெளிவற்ற குழப்பமான நிலைக்குத் தள்ளிவிட்டது எனக் குறிப்பிட்டுள்ளார். உண்மைதான். அவரது நோக்கில் புலி பற்றிய மாயைக்குள் இருப்பதன் அடிப்படையில் இப்படி ஒரு வித்தியாசமான போக்கு குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளது என நேர்மையாக ஒத்துக் கொண்டுள்ளார். நன்றி.

இவர் கூறுகிறார் "எல்லா இயக்கங்களும் ஏதோ வழியில் தவறுவிட்டிருக்கின்றன, தலைமையைக் காக்க முயன்று இருக்கின்றன. தங்களுக்குள்ளேயே ஆதிக்க உணர்வுகளை வளர்த்திருக்கின்றன. இதற்குப் புலிகளும் விதிவிலக்கானவர்கள் அல்ல. எனினும் ஏனைய இயக்கங்கள் செய்யாத, செய்ய முடியாத ஒன்றைப் புலிகள் செய்கிறார்கள்"

கடந்தகாலப் பாரம்பரியத்தின் தொடர்விளைவே இக்கருத்தின் வளர்ச்சி நிலையாகும். சரியான கருத்து நிலையின் அடிப்படையில் நின்று சரி எது, பிழை எது என்பதனை விஞ்ஞானபூர்வமாக ஆராயாமல் இலங்கையரசைவிட இந்தியவரசு சிறந்தது, புலியைவிட ஏனைய இயக்கங்கள் சிறந்தன அல்லது ஏனைய இயக்கங்களைவிட புலி சிறந்தது எனத் தராசில் நிறைபார்க்கும் போக்கின் வெளிப்பாடே இதுவாகும். ஆனால் கட்டுரையாளருக்குத் தெரியுமோ தெரியாது. புலிகளின் அரசியற் துறைத் தலைவர் யோகி யாழ் பல்கலைக்கழகக் கூட்டத்தில் "ஒப்பீடு என்பதற்கு வரலாற்றில் இடமேயில்லை. தமிழீழப் போராட்டப் பாதையில் புலிகளோடு எந்த இயக்கத்தையும் ஒப்பிட யாருக்கும் அருகதை இல்லை" எனக் குறிப்பிட்டது தெரிந்திருந்தால் கட்டுரை ஆசிரியர் ஒப்பிட்டிருக்கமாட்டார்.

இங்கு கட்டுரை ஆசிரியரால் முன்வைக்கப்பட்ட ஒவ்வோர் விடயமும் அவர் எங்கு


நிற்கிறார் என்பதைச் சுட்டப் போதுமானவையே. ஏனெனில் புலிகளின் வழமையான போக்கிலேயே அவர் "மண்டையோடுகளும், எலும்புக்கூடுகளும் மலியத்தான் செய்யும்" எனவும், புலிகளை விமர்சிப்பவர்கள் தம்மை இனங்காட்டி விமர்சிக்க வேண்டும் எனக் கொலைப் பயமுறுத்தல் விடுவதும், பின் நான் புலி ஆதரவாளன் இல்லை எனப் பதுங்குவதும் ஏன்? அவர் பாணியிலேயே கேட்டால் ஏனய்யா முகமூடி? ஏன் பொய் வேசம்?

கலம் 37இல் இதேபாணியில் வ. அருணா புலி எதிர்ப்புவாதந்தான் தூண்டிலில் மயமாகவுள்ளது எனக் கவலைப்பட்டு, மறுபக்கம் புலி—புலி எனத் தன்னை மறந்தே ஓலமிடுகின்றார். இவரைச் சகஓடிகள் பார்வையில் இரண்டு பிரிவுகளுக்குள்ளுமேயடக்கலாம். தப்பி வந்தவர்களுக்கு விமர்சிக்க என்ன தகுதியிருக்கின்றது எனும்போது இரண்டாம் பிரிவுக்குள்ளும், தனியே புலி எதிர்ப்புவாதம் என்னும்போது 3ம் பிரிவுக்குள்ளும் உள்ளடக்கலாம்.

கலம் 36இல் வே. கண்ணன் எழுதிய தூண்டிலின் போக்கு என்பது ராஜன் முருகவேலுக்கு நேர் எதிரான தீவிரபோக்கினைச் சுட்டிக்காட்டி தூண்டிலை நியாயப்படுத்துவதில் முற்பட்டுள்ளது.

தூண்டில் இயக்கங்களின் தவறான போக்குகளை நிராகரிப்பதுடன், மனித நேயத்திற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்பதை தீவிரமாகச் சொல்லுகின்றது என ஆசிரியர் கூறுகிறார். இன்று ஐ. நா. சபையிலிருந்து மதநிறுவனங்கள், நிதி நிறுவனங்கள் வரை ஏன் இயக்கங்களிலிருந்து விடுதலைப்பாதையில் — வெறுப்புற்றவர்வரை மனிதநேயம் பற்றியே பேசுகின்றனர். வெறுமனே மனிதநேயம் பற்றிக்குரல் கொடுப்பது மட்டும் இன்றைய தீர்வாக இருக்க முடியுமா? இது சீர்திருத்தவாதத்திற்கு இட்டுச்செல்ல மாட்டாதா?

வானாவும், போனாவும்.




இன்னன்னா

ஆகக்கூடியது இலங்கையின் குறைந்தபட்ச உண்மைகளைத்தானும் வெளியுலகிற்குக் கொண்டுவருவதே ஒரு சஞ்சிகையின் நியாயமான நடவடிக்கையாகும் என குறிப்பிட்டுள்ளமையை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாமலுள்ளது. இன்று முதலாளித்துவ, கருத்துருவ சாதனங்கள் யாவும் வெறும் செய்தி வெளியீட்டுக் களஞ்சியங்களாகவேயுள்ளன. இதனைச் சரியான அரசியற் செயற்பாடென நாம் கூறுகின்றோமா? இது வெறும் செய்தி வெளியீட்டு செயற்பாடு மட்டுமே. அதற்குத் தூண்டில்தான் வேண்டுமென்றல்ல. ஏராளமான சஞ்சிகைகள் இதனைச் செய்கின்றன.

மாறாகத் தூண்டில் பிழையான பக்கங்களை விமர்சிப்பதனூடாகச் சரியான தேடலை, கருத்து நிலையை உருவாக்கவேண்டும் என்று கருதுகிறேன். இதனைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் இயக்க மறுப்பாளராக இருந்துகொண்டு "இயக்க விரும்பிகளினால் முத்திரை குத்தப்படுவது" என ஒதுக்குவது தவறானதாகும்.

அடுத்துக் கலம் 36 இல் எஸ். பி. தாஸ் முரண்பாட்டைக் கையாளுதல் என்ற சிவசேகரத்தின் கருத்துக்கு மட்டும் பதிலளித்துவிட்டு அவரது ஏனைய கேள்விகள் பற்றியோ அல்லது சக ஓடிகளினால் முன்வைக்கப்பட்ட ஏனைய விடயங்கள் பற்றியோ எத்தகைய கருத்தையும் முன்வைக்கவில்லை. இதற்குக் காரணம் என்ன என்பது பற்றி எனக்குப் புரியவில்லை. எனினும் முரண்பாட்டைக் கையாளுதல் தான் பிரதான பிரச்சினை என எஸ். பி. தாஸ் கருதினாரோ தெரியவில்லை. நான் நினைக்கின்றேன் இதனைவிட எம்மிடையே நிலவுகின்ற பகைமுரண்பாடுகளை எப்படி சிநேக முரண்பாடுகளாக மாற்றுவது, அம் முரண்பாடுகளுக்கிடையில் எவ்வாறு குறைந்த பட்ச உடன்பாட்டிலான ஐக்கியத்தை ஏற்படுத்துவது என்பது இன்று பிரதான பிரச்சினையாக உள்ளது.

மேலும் இவர் முரண்பாட்டைப் பாவித்தல், புலிகளை தேசியத் தலைமையாக அங்கீகரித்தல் என்னும் இரு வேறுபட்ட அம்சங்களை இணைத்துப் பார்ப்பதன் மூலம் குழப்பத்துக்கு உள்ளாகிறார்.

ஒரு இயக்கத்தினைத் தேசியத் தலைமையாக அங்கீகரிப்பதா, இல்லையா என்பது அவ்வியக்கத்தின் கடந்தகால, நிகழ்காலச் செயற்பாடுகள், போக்குகள், குணாம்சரீதியான மாற்றங்களைப் பொறுத்தே அமைகிறது. இவ்விடத்தில் முரண்பாட்டை பாவித்தல் என்பது மூலோபாயம், தந்திரோபாயம் சம்பந்தப்பட்ட பிரச்சினையாகும்.

மேலும் சில இயக்கங்கள், நபர்கள் முரண்பாட்டைப் பாவித்தலின் அடிப்படையில் புலிகளை தேசியத் தலைமையாக அங்கீகரிக்கலாம். அது ஒரு பக்கப் பார்வை. இது மயக்கப் போய்

மயங்கும் முட்டாள்தனம் ஆகும். இதற்கு மறுபக்கம் ஒன்றும் உள்ளது. புலிகளின் கடந்தகால, நிகழ்கால போக்குகள், குணாம்ச ரீதியான மாற்றங்கள் தவிர்க்க முடியாமல் இன்று முனைப்புபெற்றுள்ள தேசியவிடுதலைப் போராட்டத்தின் முக்கியத்துவம் என்பவற்றின் அடிப்படையில் புலிகளைத் தேசிய சக்தியாக அங்கீகரிக்கிறது. ஆனால் இது புலிகளை நியாயப்படுத்துவதாக வோ, புலிகளை அங்கீகரிப்பதாகவோ அமையமாட்டாது.

இதே கலத்தில் ஜனார்த்தனனால் எழுப்பப்பட்ட கேள்விகள் நமது போராட்டத்தில் நம்பிக்கையற்று விரக்திக்குள்ளாக்கப்பட்டு ஒன்றுமே வேண்டாம், குறைந்தபட்சம் மனிதாபிமானமாவது கிடைக்கட்டும் என எங்கும் பலரிடம் எழுகின்ற பொதுவான கேள்விகளே. ஆனால் அது பிரச்சினைக்குத் தீர்வாகாது. நம் நாட்டிலே அல்லற்படுகின்ற மக்களுக்காக, அம்மக்களை இந்நிலைக்கு ஆளாக்கிய அரசினை அம்பலப்படுத்துவதற்காக, வழி தவறிச் சென்ற விடுதலையைக் கேள்விக்குறியாக்கிய இயக்கங்களை விமர்சிப்பதற்காக தூண்டிலை ஒரு களமாகக் கொள்வது பிரதானமானது. ஆனால் இவை யாவும் ஒரு சரியான திசையைக் கண்டுபிடிப்பதற்கான அடகங்களாக விளங்குவதை மறக்கக்கூடாது.

இதே கலத்தில் ரயாகரன் தூண்டிலிடம் என்ன திட்டம் இருக்கிறது என்ற கேள்வியைக் கேட்டு உச்சம் தலை அடியடித்துள்ளார். இது இவரது அதிதீவிரப் போக்கினையும், மிகையான எதிர்பார்ப்பினையும் காட்டுகிறது. இன்று தம்மை விடுதலை இயக்கங்களாக இனங்காட்டிப் போராட்டத்தை நடத்துகின்ற குழுக்களிடமே ஒழுங்கான திட்டம் இல்லாதபோது, ஐரோப்பியச் சூழலில் இருந்து தேடலை நோக்கித் தன் பார்வையைத் திருப்பிய தூண்டிலிடம் இத்தகைய கேள்வியைக் கேட்பது மிகையான எதிர்பார்ப்பின் விளைவே. இதனை விடுத்துத் தூண்டில் பரந்த விவாதங்களை நடத்துவதனூடாகவே குறைந்தபட்ச அடிப்படைத் திட்டத்தை அல்லது மூன்றாவது கருத்துநிலையை அமைப்புருவாக்க எவ்வகையில் முனைகிறது, எவ்வகையில் முனையவேண்டும் எனச் சிந்திப்பதுதான் ஆரோக்கியமானது.

இவை யாவற்றையும் ஒட்டுமொத்தமாகத் தொகுத்து நோக்கும்போது விவாதங்கள் யாவும் இறுதியில் ஒரு விடயத்துக்குள்ளேயே சுற்றிச் சுற்றி சுழன்று வருகின்றன. அதாவது புலி பாசிச சக்தியா? தேசிய சக்தியா? இன்று நடைபெறும் யுத்தம் அழிவு யுத்தமா? தேசியவிடுதலை யுத்தமா? என்ற வட்டத்திற்கு உள்ளேயே குறுகியிருப்பதைக்காண முடிகிறது. தொடர்ந்தும் இந்த நிலைமையால் குண்டுச் சிரட்டைக்குள் குதிரை விட்ட மாதிரியில்லாமல் இன்றைய எமது தேவையை உணர்ந்து அதற்கான தேட

லை விரிவுபடுத்துவது என்பது இன்றியமையாதது.

கலம் 39இல் 'தூண்டிலின் போக்கல்ல தமிழீழத்தின் போக்கே' என்ற துணையோடியின் கட்டுரையில் குறிப்பிட்ட கருத்துடன் ஒத்துக்கூறுவதானால், புலிகளோடு சேர்வதோ அல்லது புலிகளைப் பலப்படுத்துவதோ அல்லது வெறுமனே தூற்றிக்கொண்டு இருப்பதோ அல்லது வாய் மூடி மௌனியாவதோ இன்றைய தேவை அல்ல. தடுப்பு யுத்தம் தற்காப்பு யுத்தம் என்ற நிலையிலிருந்து அடுத்த கட்டத்திற்கு நகரமுடியாமல் இருக்கும் போராட்டத்தை நகர்த்துவதற்கான அடிப்படை வேலைமுறைகள் பற்றி நோக்குதல் வேண்டும்.

இது மீண்டும் ஒரு ஆயுதம் தாங்கிய இயக்கத்தை உருவாக்குதலால் மட்டும் சாத்தியப்படப்போவதில்லை. அவ் வாறாயின் மீண்டும் புலியைப் பழிவாங்கும் ஒரு புலியாக உருவெடுக்கும் இயக்கத்தையே உருவாக்கமுடியும்.

ஆயின் இந்நிலை மாறி புதிய பரிமாணத்தைப் பெறவேண்டுமாயின் புறநிலை மாற்றத்தினால் மட்டும் முடியாது. அது உள்ளார்ந்த சிந்தனை முறைமையின் போக்கில் அகநிலையான மாற்றத்தைப் பெறுவதன் மூலமே முடியும். இது குறுகிய காலப்பகுதியில் ஏற்படுவது அல்ல. நீண்ட காலப் போக்கின் படிப்படியான வளர்ச்சியே சிந்தனா முறைமையின் வளர்ச்சியாகக் கருதப்படும்.

எனவே இம் மாற்றத்தினூடான நிலையினை உருவாக்கி கலம் 39இல் குறிப்பிட்டவாறு பொது எதிரிக்கு எதிரானபோராட்டத்தில் ஐக்கியமும், புலிகளின் முரண்மிகு தன்மைக்கு, பாசிசப் போக்குக்கு எதிரான முனைப்பான போராட்டமும் மேற்கொள்ளப்படவேண்டும்.

யதார்த்தம் இந்நிலைக்கு இடம் கொடுப்பது கடினம். ஏனெனில் தமது தளங்களில் புலிகள் பலமாகவும், அரச ஆதிக்க பிரதேசங்களில் அரசு பலமாகவும் காணப்படுகிறது. இவ்விரு சக்திகளுக்குமிடையிலும் புதிய கருத்துப்போக்கு அமைப்புருவாக்கப்படவேண்டும் என்பது காலத்தின் மறுக்கமுடியாத தேவையாகின்றது.

•

என். சிவன்மகன் (எ.ஷம்)

---

ளைவை மிதந்தவன் (தொடர்ச்சி)

"அப்பிடியொண்டுமில்லாத தாலைதான் பிரச்சினையில்லாமஇருக்கிறம்"

"ஸ்போட்ஸ் கிளப்..?"

"வெயில் எறிச்சா அங்கினேக்கை கொஞ்சப்பேர் புட்போல் விளையாடுவம். கிளப்பெண்டு பெரிசா ஒண்டுமில்லை"

(இன்னும் வரும்)

---

பின்னட்டை அறிவித்தல்

"தாய்" நாவலில் மாக்ஸீம் கோர்க்கி.



# கனவை மிதித்தவன்

பார்த்திபன்

"பஸ்ஸுக்கு நேரமாச்சு"

"இந்தா வெளிக்கிட்டன்"

கிறீம் எடுத்து முகத்தில் தேய்த்து, கைகளிலும் பிரட்டிக் கொண்டு ஞானம் றெடியானான். முத்துவும், அவனும் பஸ் நிலையத்திற்கு வந்தார்கள்.

இடைக்கால குளிர், மழை, ஸ்னோவிற்குப்பின் மீண்டும் வெயில். யாரும் நம்பாமல், தடித்த உடுப்புகளே போட்டிருந்தனர். இளசுகள் மட்டும் நிறைய சுதந்திரமாய்...

பஸ் வர ஏறிக்கொண்டார்கள். பின் ஸீற்றில் ஏற்கெனவே கறுப்புத் தலைகள் சீட்டுக்காசு சம்பந்தமாக, சத்தமாய் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்தனர். இவர்களைக் கண்டதும்-

"என்ன முத்து...! ஸ்ரட்டுக்கே?"

"கிறங்கன் கவுசுக்கு"

"என்ன விசேசம்? ஆரேன் பிள்ளைப் பெத்திருக்கினமே?"

"பாலகுமார் வாட்டில"

அவர்கள் இருவரும் சீட்டுச் சமாசச்சாரத்தைத் தற்காலிகமாய்ப் புறக்கணித்துவிட்டு சுவாரஸ்யமான விடயத்துக்குவந்தார்கள்.

"என்ன நடந்தது? ஒரு கிழமையா அவுட்டசிற்றியிலை நின்டதிலை கன புதினம் அறியே-லாமப் போச்சு"

"வருசப் பிறப்பு விழாவிலை நாலைஞ்சுபேர் வந்து இருட்டடி அடிச்சுப் போட்டாங்கள்"

"ஆராக்கள்?"

"ஏன் என்ன பிரச்சினை?"

"மக்டொனால்ட்ஸில நடந்த பிரச்சினை. அங்க வைச்சு பாலகுமாரிட்டடை அடி வேண்டினவன் ஆக்களை செற் பண்ணி

அடிச்சிருக்கிறான்"

"சீச்சி... நாடு நாறி போச்சு. யெமனியை யாழ்ப்பாணமாயே ஆக்கிப் போட்டாங்கள். பிரச்சினையைப் பேசித் தீக்கிறதுக்கு அடிபட்டுக் கொண்டிருக்கிறாங்கள். இஞ்சயே உப்பிடி எண்டால்...."

"வர வர எல்லாத்துக்கும் அடி உதை எண்டதாய்போச்சு. சனம் எப்பதான் திருந்தப் போகுதோ?"

அவர்கள் இருவரும் கதைக்க முத்துவும், ஞானமும் பதில் எதுவும் சொல்லாமல் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

"இனி இவன் பாலா சும்மாவே இருக்கப்போறான். எப்பிடியும் சாத்தந்தானே பாப்பான்"

"அதுதானே. சும்மா விட்டால் பிறகு பொன்னயன் எண்டு நினைச்சு நல்லா இடங் கண்டிடுவாங்கள்"

"பாலாவுக்கும் ஒருகிளிக் இருக்குத்தானே"

"அவங்களை றோட்டிலை வைச்சுச் சாத்தாம வீட்டை போய் செமத்தையா குடுத்தாத்தான் திறமாயிருக்கும்"

அவர்கள் இருவரினதும் நோக்கம் சமாதானமா, சண்டையா என்பது புரியாமல் முத்துவுக்கும், ஞானத்துக்கும் தலை சுற்றியது. அவர்கள் பழையபடி சீட்டுக் காசில் இறங்கிவிட்டார்கள்.

ஆஸ்பத்திரி சுறுசுறுப்பாயில்லை. இரண்டு, மூன்று நோயாளிகள் முன் வாசலுக்கு வந்து ஏகாந்தமாய் புகை விட்டார்கள். பில்ட் படித்தார்கள். எங்கும் சுத்தம். சத்தமில்லை.

முத்துவும், ஞானமும் உட்பிரவேசித்தபோது பாலகுமார் ரி. வி. யில் சிறுவர் நிகழ்ச்சி பார்த்துக்கொண்டிருந்தான். பக்கத்து கட்டில் கிழவரிடம் மகளும், பேத்தியும் அளவளாவிக் கொண்டிருந்தார்கள்.

"என்னடாப்பா, எப்பிடியிருக்கிறாய்? ஆஸ்பத்திரி சாப்பாட்டோடை கொஞ்சம் உடம்பு வைச்சமாதிரி தெரியுது"

"எல்லாம் திறம். நேரமுக்குச் சாப்பாடு. படுக்கை. ரி. வி ஒரே ஒரு பிரச்சினைதான்.."

"என்ன? தனிய இருக்க விசராயிருக்குதோ?"

"இல்லையில்லை. விடிய எழுப்பிப் போடுறாங்கள் பெட்சீட் மாத்துறதுக்காண்டி. மற்றப்படி நல்ல குணமான நேர்சுகளும்...."

"அதுதானே பாத்தன். எங்க இதைப் பற்றி சொல்லாமவிட்டிட்டியே யெண்டு"

"நாட்டிலை சனம் என்னைப் பற்றி என்ன கதைக்குது?" பாலகுமார் விசாரித்தான்.

"முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் எண்டு ஒருகோ

ஸ்டி. எங்கடை ஸ்ரட்காறனுக்கு அவுட்டசிற்றி ஆக்கள் அடிக்கவோ, அதை நாங்கள் பாத்துக்கொண்டிருக்கவோ, பாலா வந்தவுடனை கூட்டிக்கொண்டு போய் கணக்கு முடிக்கத்தான் இருக்கு எண்டு இன்னொரு கோஸ்டி"

"பறவாயில்லை. மறத் தமிழர்கள் குறைந்துவிடவில்லை"

"கிழிஞ்சாய் போ. துண்டு வெட்டிப்போட்டு வந்து திருப்பி அடிபடுறதெண்டால் வராதை. ஆஸ்பத்திரியிலேயே கிட!" என்றான் முத்து.

"இவனைப்போல ஒருபயந்தாங்கொள்ளியை நான் சந்திக்கவேயில்லை. இது தன்மானப்பிரச்சினையடாப்பா" என்றான் சிரித்தபடி பாலகுமார்.

"அவனுக்கு என்ன சொல்லியும் விளங்குதில்லை. என்னைப் பயந்தாங்கொள்ளி எண்டு பகிடி பண்ணிறான்" மறுநாள் வேலை செய்துகொண்டிருக்கும்போது உருத்திரனுக்குச் சொன்னான் முத்து.

"இதுதான் நான் அப்பவே சொன்னது. உதிரி நிலையிலை எல்லாம் அழிஞ்சுகொண்டு போகுதெண்டு. ஒரு அமைப்பாயில்லாட்டி இப்பிடித்தான் எல்லாம் தனிநபர் விசயங்களாய் சீரழிப் போகும்"

வேலை முடிந்து போகும்போது "அப்ப என்ன செய்யலாம்?" முத்து ஆரம்பித்தான்.

ஜேர்மெனியர்கள் கார்களில் பறக்க, கிறீக், போலந்து ஸ்பெயின், யூகொஸ்லாவியா எல்லாம் நடந்தன கோப்பியும், பாணும் கொண்டுவரும் கறுப்பு பாக்குடன். தங்கள் பாசையில் குடும்பப் பொருளாதாரத்தை அலசிக்கொண்டு போனார்கள். பாதையெங்கும் வெயிலை வரவேற்கும் ஆயத்தங்கள்.

"உங்கடை ஸ்ரட்டிலை சங்கம், ஒன்றியம் ஒண்டும் இல்லையே?" கேட்டான் உருத்திரன்

(தொடர்ச்சி 54 ஆம் பக்கம்)

---

வளைகுடாவில் இன்று
(தொடர்ச்சி)

குர்திஸ் மக்கள் தங்கள் சுயநிர்ணயத்திற்காகத் தாங்களே சொந்தமாகப் போராடவேண்டும். இந்தப் போராட்டங்களுக்குத் தலைமை வகிக்க சரியான வழியில், உறுதியான கொள்கைகளுடன் மக்கள் பலத்தில் நம்பிக்கை வைத்து போராட்டத்தை முன்னெடுக்கக்கூடிய மக்கள் கட்சிகளாலேயே முடியும். மாறாக அமெரிக்கக் கூட்டணிகளினதும் ஏகாதிபத்தியங்களினதும் ஆயுத உதவி, பண உதவி, இராணுவஉதவி போன்ற சதி வலைக்குள் வீழ்வதோ, தவறான தலைமைகளின் கீழ் அணிதிரள்வதோ எந்த விடிவையும் தரப்போவதில்லை. இது இலங்கையில் நாங்கள் கற்றுக்கொண்ட பாடமாகும்.

•

கார்த்திக்

## விருப்பம்!

அரசபடைகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டதாகச் சொல்லப்படும் கிழக்கு மாகாணத்தில் பெரும்பாலானோர் இன்னும் காடுகளில் தான் தஞ்சமடைந்துள்ளனர். அரசின் சிவில் நிர்வாகம் செயலற்றே இருக்கிறது. வெறி பிடித்த இராணுவம், பொலிசினால் தமிழர்கள் கடத்தப்பட்டும், வெட்டியும், சுட்டும் கொல்லப்பட்டுவருகின்றனர். புலிகளினால் முஸ்லீம்கள் கடத்தப்படுவதும், கொல்லப்படுவதற்குமான விளைவுகளையும் முஸ்லீம் ஊர்க்காவற்படை மூலம் அப்பாவி மக்களே மரணவேதனையுடன் அனுபவித்து வருகின்றனர்.

வடக்கிலுள்ள தமிழர்களுக்கு விதிக்கப்பட்ட பொருளாதாரத்தடை ஒரு வருடத்திற்கும் கூடுதலாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. உணவுப் பொருட்கள் மருந்துப் பொருட்களை அனுப்பி வருவதாக அரசு நாடகமாடினாலும், உதவி நிறுவனங்கள் தகுந்த பத்திரங்களுடன் கொண்டு செல்லும் உணவு, மருந்துப்பொருட்கள் கூட இராணுவத்தினரால் தடைமுகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. வேகமாகப்பரவி வரும் தொற்று நோய்களினால் பட்டினியால், அரசின் விமானக்குண்டுவீச்சுத் தாக்குதல்களினால் தமிழ்மக்கள் கொன்றொழிக்கப்பட்டு வருகிறார்கள்.

இலங்கையரசின் திட்டமிட்ட இனவழிப்பு இராணுவ நடவடிக்கைகளுக்கு சர்வதேச நிதி நிறுவனங்களின் பொருளாதார உதவியும், சீனா உள்ளிட்ட நாடுகளின் ஆயுத உதவியும், துரோக இயக்கங்களின் ஆள், பிரச்சார உதவியும் பலமூட்டி வருகின்றன. புலிகளின் நடவடிக்கைகள் கூட இலங்கையரசுக்கு ஒரு வகையில் உதவி வருகின்றன என்பதே உண்மையாகும்.

தமிழ்ப் பகுதிகளில் இராணுவம் நுழைவதைத் தடுத்துப் போரிட்டுக்கொண்டே தமிழ்மக்கள் மீதும் ஆயுத அடக்குமுறையைப் புலி பிரயோகித்து வருகிறது. கப்பம் வேண்டுதல், ஆட்திரட்டல், சனநாயக சக்திகளை அழித்தல் என்பவற்றுடன் இப்போது கல்வியிலும் புலிகள் கைவைத்துள்ளனர். 'பிரபாயிஸம்' ஆரம்ப பாடசாலையிலிருந்து பல்கலைக்கழகம்வரை பாடமுறையாக்கப்படுகிறது. பள்ளிவாசல்களுக்குள் வைத்து முஸ்லீம்களை கொலை செய்ததிலிருந்து வடக்கில் வாழ்ந்த முஸ்லீம்களை ஓட்டாண்டிகளாகத் துன்புறுத்தி வெளியேற்றியதுவரை இரு இனங்களுக்குமிடையிலான உறவில் ஆப்பு இறக்கிய புலிகள் இப்போது எல்லைக் கிராமங்களுக்குள் புகுந்து அப்பாவி சிங்கள மக்களைக் கொன்று வருகின்றனர்.

தனது யுத்தம் இனஅழிப்பு யுத்தமல்ல, பயங்கரவாதிகளை அழிப்பதே என்றும், தமிழர்களின்

போராட்டம் பயங்கரவாதமே என்றும் இலங்கையரசு துரோக இயக்கங்களின் துணையுடன் உள்நாட்டிலும், வெளிநாடுகளுக்கும் பிரச்சாரம் செய்வதற்கும் நியாயப்படுத்துவதற்கும் இவை போதாதா?

அகதி முகாம்களிலும், காடுகளிலும் தஞ்சமடைந்தவர்கள் போக, புலிகளுக்குப் பத்தாயிரம் ரூபா கொடுக்கக் கூடியவர்கள் கொழும்புக்கும், இந்தியாவுக்கும் சென்றுகொண்டிருக்கிறார்கள். புலிகளுக்குப் பணம் கொடுக்க வழியில்லாதவர்களே இன்று யுத்தத்தை எதிர் கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள். பட்டினி, நோய், மரணங்களுடன் அரசின் விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல்களுக்குள்ளும் இருக்க பலவந்தப்படுத்தப்பட்டவர்கள் அன்றாடம் கூலி வேலை செய்யும் – அதையும் இழந்த –மக்களே. எந்த மனிதாபிமான உதவிகளும் கூடக் கிடைக்காத நிலையில் தங்கள் மேல் திணிக்கப்பட்டிருக்கும் இந்தப் போர் நிறுத்தப்படவேண்டும் என்பதே இவர்களின் விருப்பம்.

இன அழிப்புக்காக அரசும், தன் நலன்களை முதன்மைப்படுத்தி புலியும் நடத்தும் இந்த யுத்தம் நிறுத்தப்படுவதற்குரிய நிர்ப்பந்தங்களை உருவாக்கமுடியாதுபோனால், யுத்தத்தில் பலவந்தமாக அடக்கப்பட்டிருக்கும் ஏழை மக்களின் அழிவு தொடரும் அபாயமும் நிறுத்தப்படாமல் போகும்.


# தூண்டில்

மே 1991

கலம்: 41

ஆசிரியர் குழு: கடலோடிகள்

முகவரி: THOONDIL
Südasien Büro
Grosse Heimstr. 58
4600 Dortmund 1
F . R . G

தொலைபேசி: (0231)136633
(புதன் கிழமைகளில்
14-20மணி வரை)

சந்தா:

ஜேர்மனி : 6 மாதங்கள்- 20,-டி.எம்
1 வருடம் - 38,-டி.எம்

ஐரோப்பா : 6 மாதங்கள்- 25,-டி.எம்
1 வருடம் - 48,-டி.எம்

அமெரிக்கா,
ஆபிரிக்கா,
ஆசியா : 1 வருடம் - 65,-டி.எம்

அவுஸ்ரேலியா: 1 வருடம் - .75,-டி.எம்

தபாற்கணக்கு
இல: 30807468
Postscheckamt Dortmund
BLZ 44010046

சஞ்சிகை வளர்ச்சிக்கான உதவிகளில் ஒன்றாக உங்கள் சந்தா நிதியை அனுப்பி வைத்ததும் எமக்கு கடிதம் மூலம் அறிவிப்பதனால் சஞ்சிகையை அனுப்பி வைப்பதற்குரிய கால தாமதத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

உங்கள் கருத்துகள், விமர்சனங்களுடன் எங்களுடையதும், உங்களுடையதுமான முயற்சிகளை பயனுள்ளதாக்குவோம்.

# அறிவித்தல்

வறுமை, பசி, பிணி – தங்களது உழைப்புக்குப் பிரதியாக மக்களுக்கு இவைதான் கிடைக்கின்றன. சகல விஷயங்களுமே நமக்கு எதிராக இயங்குகின்றன. நம் வாழ்நாளெல்லாம், ஒவ்வொருநாளும், நமது கடைசி மூச்சுவரை இறுதி பலத்தையும் நமது உழைப்புக்-காக அர்ப்பணம் செய்வதால் எப்போதும் நாம் அழுக்கடைந்து அவர்களால் ஏமாற்றப்படுகிறோம். நாம் பெறவேண்டிய இன்பத்தையும், நலன்களையும் மற்றவர்கள் அறுவடை செய்து அனுபவிக்கிறார்கள். சங்கிலியால் கட்டிப்போடப்பட்ட நாய் மாதிரி நம்மை அவர்கள் அறியாமையில் ஆழ்த்தியுள்ளார்கள். நமக்கு எதுவுமே தெரிவதில்லை. ஒவ்வொன்றுக்கும் பயப்படுகிறோம். நாம் எதையும் தெரிந்துகொள்ள-வே அஞ்சுகிறோம். நமது வாழ்க்கையே விடியாத இருள் நிறைந்த இரவாகப் போய்விட்டது.